13TH
JULY
2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 82 | பக்கங்கள் - 15 | editor.uthayam@gmail.com

# குருக்கள் மடம் மனிதப் புதைகுழி; விசாரணையில் திருப்புமுனை



## கானாமலாக்கப்பட்டோர் அலுவலகம் சட்ட மா அதிபருக்கு நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(பாறுக் ஷிஹான்)

*1990.07.12 ஆந் திகதி புனித ஹஜ் கடமையை நிறைவு செய்து வீடு திரும்பிய யாத்திரிகர்கள் மற்றும் வியாபாரிகள் கல்முனை - மட்டக்களப்பு வீதியில் குருக்கள்மடம் எனும் இடத்தில் கடத்திக் காணாமலாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு புதைக்கப்படட்டமை தொடர்பில் பாதிக்கப்பட்ட அப்துல் மஜீத் அப்துல் ரவூப் என்பவரால் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.*

02ம் பக்கம்பார்க்க...

# ஐ.நா அறிக்கையாளர் அல்பானிஸ்க்கு தடைகளை விதித்தது அமெரிக்கா



(எம்.ஐ.அப்துல் நஸார்)

*பலஸ்தீனில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் புலனாய்வினை மேற்கொள்ளும் ஐ.நா. வின் விசேட அறிக்கையாளரான பிரான்செஸ்கா அல்பானீஸ் மீது தடைகளை விதிப்பதாக கடந்த புதன்கிழமை (09) ட்ரம்ப் நிருவாகம் அறிவித்தது. கடந்த 20 மாத காலமாக காஸா மீதான*

02ம் பக்கம்பார்க்க...

## துருக்கி - குர்திஷ் ஒப்பந்தம்; ஆயுதங்களை கைவிடும் குர்திஷ்கள்

*துருக்கியுடனான சமாதான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ஈராக்கிய குர்திஷ் பிரிவினைவாதிகள் தங்கள் ஆயுதங்களை கைவிட தொடங்கியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி*

03ம் பக்கம்பார்க்க...

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்**

## விசாரணையின் திருப்பங்களை உரிய நேரத்தில் அறிவிப்போம்



*உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் வெளிவரும் புதிய விடயங்களை தேவையான நேரத்தில் மக்களுக்கு அறிவிப்போம் என சிறிலங்காவின் பிரதமர் ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.*

04ம் பக்கம்பார்க்க...

## தீர்வை வரியைக் குறைப்பதற்காக அமெரிக்காவுடன் பேச்சு தொடரும்

### சலுகைகளைப் பெறவும் எதிர்பார்ப்பு!



*அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளின் விளைவாக, விதிக்கப்பட்டிருந்த தீர்வை வரி விகிதத்தை 44% இலிருந்து 30% ஆகக் குறைக்க முடிந்துள்ளதாகவும், அந்த பேச்சுவார்த்தைகளை தொடர்வதன் மூலம் மேலும் சலுகைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க*

02ம் பக்கம்பார்க்க...

## அணுசக்தி பேச்சுக்களை தொடர்வதாயின் இரட்டை நிலைப்பாட்டை ஐ.நா கைவிட வேண்டும்

### ஈரான் வலியுறுத்து

*அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் யுத்த நிறுத்தம் தொடர்பில் சாத்தியமான முன்னேற்றம் ஏற்படும் என நம்பிக்கை தெரிவித்திருந்த நிலையில், இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான காஸா யுத்த நிறுத்தத்திற்கான*

03ம் பக்கம்பார்க்க...

## அவசர சீர்திருத்தங்கள் இன்றேல் 2028ல் பொருளாதார நெருக்கடி

### சஜித் பிரேமதாஸ அரசுக்கு எச்சரிக்கை



*அரசாங்கம் இப்போதுள்ள நிலையில் அவசர திருத்தங்களை மேற்கொள்ளாவிடின் 2028 ல் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படுமென எதிர்க்கட்சித் தலைவர்*

12ம் பக்கம்பார்க்க...

## சவூதி நிதிய பிரதம நிறைவேற்றதிகாரி ஞாயிறன்று இலங்கை வருகிறார்

### திங்களன்று வயம்ப பல்கலை நிகழ்விலும் பங்கேற்பு



(றிப்தி அலி)

*அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுல்தான் அல் மர்ஷாட், இன்று (13) இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.*

*சவூதி அரேபியாவின் 28 மில்லியன் அமெரிக்க டொலர் மானியத் தொகையில் நிர்மாணிக்கப்பட்ட வயம்ப*

05ம் பக்கம்பார்க்க...

## ஹஜ் யாத்திரீகர்களுக்கான பதிவு விண்ணப்பம் கோரும் திணைக்களம்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

*முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இலங்கை ஹஜ் உம்ரா குழுவுடன் இணைந்து 2026 ஆம்*

12ம் பக்கம்பார்க்க...

## ஈரான் நடாத்திய தாக்குதலில் கட்டார் படைத்தளம் சேதம்

### முதற் தடவையாக ஒப்புக் கொண்ட அமெரிக்கா!

*ஈரானின் ஏவுகணைகள் கட்டாரில் உள்ள விமானப்படைத்தளத்தை தாக்கியதாக*

03ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

## ஐ.நா...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

யுத்தத்தின்போது பலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவர் குரல் கொடுத்து வருகிறார்.

அமெரிக்காவினால் முன்மொழியப்பட்ட காஸா யுத்த நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பாக கலந்துரையாடுவதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்திப்பதற்காக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்த வாரம் வாஷிங்டனுக்கு விஜயம் செய்த நிலையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தடைகளின் காரணமாக ஏற்படவுள்ள பிரயோகரீதியான பின்விளைவுகள் என்ன, அல்பானீஸ் அமெரிக்காவிற்கு பயணிக்க முடியுமா என்பவை தொடர்பில் தெளிவாகத் தெரியவில்லை.

அல்பானீஸ் இத்தாலி நாட்டைச் சேர்ந்த மனித உரிமைகள் சட்டத்தரணியாவார், அவர் காஸாவில் இடம்பறும் "பலஸ்தீன இனப்படுகொலை" தொடர்பில் குரல் கொடுத்து வருகிறார். எனினும், இஸ்ரேலும் அமெரிக்காவும் இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளன, இஸ்ரேல் ஒரு பயங்கரவாத அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது, அதே நேரத்தில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாமலிருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது என இரு நாடுகளும் கூறி வருகின்றன.

அல்பானீஸ் போன்ற வெளியக நிபுணர்கள் ஐக்கிய நாடுகள் சபையை உத்தியோகபூர்வமாக பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை என்பதோடு அவ்வாறானவர்களுக்கு முறையான அதிகாரம் இல்லை. எனினும், நாடுகளின் மனித உரிமைகள் பதிவுகளை கண்காணிப்பதற்கான ஒரு வழிமுறையாக அவர்கள் ஐ.நா.வுக்கு அறிக்கை சமர்ப்பிக்கின்றனர்.

அண்மைய வாரங்களில், காஸா மீதான யுத்தத்தை நிறுத்துவதற்கு இஸ்ரேல் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறு அல்பானீஸ் ஏனைய நாடுகளை வலியுறுத்தியுள்ளார். நெதன்யாகு மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் உட்பட ஏனைய உயர் இஸ்ரேலிய அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிறப்பித்துள்ள பிடியாணைகளுக்கு அல்பானீஸ் பலத்த ஆதரவாளராகவும் இருந்து வருகிறார்.

அண்மையில், அல்பானீஸ் இஸ்ரேலின் காஸா மீதான ஆக்கிரமிப்புக்கு உதவும் நிறுவனங்களின் பட்டியலில் பல பெரிய அமெரிக்க நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு ஒரு அறிக்கையினை வெளியிட்டார்.

இஸ்ரேலிய இராணுவத்திற்கு ஆயுதங்களை வழங்கிய நிறுவனங்கள் மற்றும் பாலஸ்தீன வீடுகள் மற்றும் சொத்துக்களை இடித்து அழிப்பதற்கான புல்டோசர் உபகரணங்களின் உற்பத்தியாளர்களும் அவரது பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சர்வதேச நீதிக்கான பணிப்பாளர் லிஸ் ஈவன்சன், அமெரிக்க அரசாங்கத்தின் முடிவு "உண்மையில் ஒரு ஐ.நா. நிபுணர் தனது வேலையைச் செய்ததற்காக அவரை மௌனிக்கச் செய்வதாகும். பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலிய மனித உரிமை மீறல்கள் பற்றிய உண்மையைப் பேசுவது மற்றும் அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் அதற்கு உடந்தையாக இருக்கக்கூடாது என்ற குரலுக்கு எதிரானதுமாகும்" எனத் தெரிவித்தார்.

"உலகின் மிக மோசமான குற்றங்களுக்கான நீதியைத் தடுப்பதற்கான அமெரிக்க அரசாங்கத்தின் வெட்கமற்ற முயற்சிகளை ஐ.நா. மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உறுப்பு நாடுகள் கடுமையாக எதிர்க்க வேண்டும் என்பதோடு அல்பானீஸ் மீதான மூர்க்கத்தனமான தடைகளை கண்டிக்க வேண்டும்," எனவும் அவரதெரிவித்தார்.

இஸ்ரேலிய அதிகாரிகள் அல்பானீஸ் அறிக்கையை "சட்டரீதியாக ஆதாரமற்றது, அவதூறு மற்றும் அவரது பதவியை வெளிப்படையாக துஷ்பிரயோகம் செய்திருப்பதாக" கண்டித்து, "ஹமாஸ் அட்டூழியங்களை மூடி மறைப்பதற்கான முயற்சி" எனக் குற்றம் சாட்டினர்.

"அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான அல்பானீஸின் அரசியல் மற்றும் பொருளாதார யுத்தத்திற்கான பிரச்சாரத்தை இனிமேலும் பொறுத்துக்கொள்ள முடியாது" என அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் மார்கோ ரூபியோ சமூக ஊடகங்களில் இட்டுள்ள ஒரு பதிவில் குறிப்பிட்டுள்ளார். "தற்காப்புக்கான எமது நண்பர்களின் உரிமையில் நாங்கள் எப்போதும் துணை நிற்போம்." எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு இரண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வுகளில் எவற்றிலும் பங்கேற்காததால், அமெரிக்கா இதற்கு முன்பு அல்பானீஸ் உடனான கவலைகளை நேரடியாகக் கவனிக்கவில்லை. ஜனவரி 20 அன்று 47வது அமெரிக்க ஜனாதிபதி மீண்டும் பதவியேற்ற சிறிது நேரத்திலேயே, ட்ரம்ப் நிருவாகம் வொஷிங்டனை இவற்றிலிருந்து விலக்கிக் கொண்டது.

மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க், அல்பானீஸ்க்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகள் தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பிரதேசங்களில் நிலவும் மனித உரிமைகள் நிலைமை தொடர்பிலான ஐ.நா. நிபுணர் மேற்கொண்ட பணிக்காக அவர் மீது தடை விதிக்கப்பட்ட தடைகளை உடனடியாகத் மீளப் பெறுமாறு டர்க் அறிக்கையொன்றின் மூலம் அமெரிக்காவை வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் குழுவில் உள்ள ஏனையவர்களுடன் இணைந்து, விசேட அறிக்கையாளர்கள் சர்வதேச கரிசனை காணப்படுகின்ற உணர்திறன் வாய்ந்த, பெரும்பாலும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளைப் பற்றி பேசுகிறார்கள் என ஐ.நா. மனித உரிமைகள் தலைவர் குறிப்பிட்டார்.

## தீர்வை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தெரிவித்தார்.

அதன்போது, இந்நாட்டின் பொருளாதாரம், வர்த்தகம், வர்த்தக சமூகம் மற்றும் மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் சாதகமான திருத்தங்களை மேற்கொள்வதே அரசாங்கத்தின் விருப்பமாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அமெரிக்காவினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய தீர்வை வரிக் கொள்கை தொடர்பான கலந்துரையாடல்களின் முன்னேற்றம், தற்போதைய நிலைமை மற்றும் இந்தத் தீர்வை வரிக் கொள்கை செயல்படுத்துவதுடன் எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள் தொடர்பில் ஏற்றுமதிக் கைத்தொழில் தொடர்பான அனைத்து தரப்பினருடனும் இன்று (12) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்த சவாலான நேரத்தில், அதன் நேர்மறையான அம்சங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி புதிய சந்தை அணுகுமுறைகளை அடையாளம் காண அரசாங்கம் மற்றும் தனியார் துறையும் இணைந்து செயற்படுவதன் அவசியம் மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தலுக்கான வாய்ப்புகள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, மேற்கு மாகாண ஆளுநர் ஹனீஃப் யூசுப், மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.ஏ. விமலேந்திராஜா, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ, டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜேசூரிய, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க, இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத், சர்வதேச வர்த்தக சபையின் தலைவர் ஷனில் பெர்னாண்டோ, தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் ஹூசீபா அக்பரலி ஆகியோருடன் பிராண்டிக்ஸ் குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி அஷ்ரப் ஓமர் உட்பட ஏற்றுமதித் துறையுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## குருக்கள்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அதனடிப்படையில் கடந்த 2014 ஆம் ஆண்டு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கௌரவ நீதிவான் அவர்கள் குறித்த சந்தேகத்திற்கிடமான மனிதப்புதைகுழி அமைந்துள்ளதாக நியாயமாக சந்தேகிக்கப்படும் இடத்தைத் தோண்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கையிடுமாறு உரிய அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கட்டளையாக்கி இருந்தார்.

அதனடிப்படையில் நில அளவைத் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம், தொல்லியல் திணைக்களம், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், தடயவியல் மருத்துவம் மற்றும் நஞ்சியல் நிறுவகம் என்பன தமது ஆய்வுகளை மேற்கொண்டு குறித்த சந்தேகத்திற்கிடமான மனிதப் புதைகுழி அமைந்துள்ளதாக நியாயமாகச் சந்தேகிக்கப்படும் இடத்தைத் தோண்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை முடிவுறுத்தி மன்றுக்கு திட்ட வரைபையும் சமர்ப்பித்திருந்தனர்.

இந்நிலையில், மன்றுக்கு சமர்ப்பணங்களை மேற்கொண்டிருந்த களுவாஞ்சிக்குடி பொலிஸார் குறித்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று அதனை நீதிமன்றுக்கு அறிவிப்பதற்குத் தவணையொன்றை வழங்குமாறு மன்றுக்குத் தெரிவித்திருந்தனர். அதன் பிரகாரம், 04.10.2020 இல் சட்டமா அதிபரினால் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக குறித்த வழக்கானது கிடப்பிலிடப்பட்டிருந்தது.

இப்பின்னணியிலேயே இவ்வழக்கின் முறைப்பாட்டாளரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக 11.07.2025 ஆந் திகதியாகிய இன்று குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணியால் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட நகர்த்தல் பத்திரம் மூலம் குறித்த வழக்கானது திறந்த மன்றில் அழைக்கப்பட்டது. இதன்போது முறைப்பாட்டாளர் சார்பில் மன்றில் முன்னிலையாகி இருந்த சட்டத்தரணிகளின் சமர்ப்பணம் மற்றும் வழக்கேட்டை மிக நுணுக்கமாக ஆராய்ந்த நீதிமன்றமானது முறைப்பாட்டாளரின் முறைப்பாடானது நீதிமுறையாக அணுகப்படாமல் நிலுவையாக உள்ளமையானது நீதியின்பாற்பட்டதல்ல எனும் அடிப்படையில் குறித்த வழக்கை எதிர்வரும் 21.07.2025 க்கு தவணையிடுவதாகவும் குறித்த தினத்தில் மன்றில் முன்னிலையாகுமாறு சட்டமா அதிபருக்கும், காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்துக்கும் களுவாஞ்சிக்குடி பொலிசாருக்கும் அறிவித்தல் அனுப்புமாறு கட்டளை ஆக்கியுள்ளார்.

குறித்த இவ்வழக்கில் முறைப்பாட்டாளர் சார்பில் குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணிகளான முஹைமீன் காலித் , முபாறக் முஅஸ்ஸம் ஆகியோர் மன்றில் தோன்றி இருந்தனர்.




## அனுசக்தி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பேச்சுவார்த்தைகளுக்கு கால அவகாசம் தேவை என கடந்த செவ்வாய்க்கிழமை (08) கட்டார் தெரிவித்தது,

“தற்போது எந்த காலக்கெடுவையும் கூற முடியும் என நான் நினைக்கவில்லை, ஆனால் இதற்கு எங்களுக்கு கால அவகாசம் தேவைப்படும் என இப்போது கூற முடியும்“ என கட்டாரின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் ஊடகப் பேச்சாளர் மஜீத் அல்-அன்சாரி, தோஹாவில் மறைமுகமான பேச்சுவார்த்தைகள் மூன்றாவது நாளாக தொடர்கின்ற நிலையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதனிடையே, ட்ரம்ப் மீண்டும் பதவிக்கு வந்ததிலிருந்து வெள்ளை மாளிகைக்கு மூன்றாவது தடவையாக வருகை தந்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பேச்சுவார்த்தைகள் இடம்பெறும்போது வாஷிங்டனில் இருந்தார்.

யுத்த நிறுத்தத்திற்கு அழுத்தம் கொடுக்கும் ட்ரம்ப், ஒரு ஒப்பந்தம் எட்டப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார், “ஒரு இழுபறி இருப்பதாக நான் நினைக்கவில்லை. விஷயங்கள் மிகச் சிறப்பாக நடந்து வருவதாக நான் நினைக்கிறேன்.“ எனவும் அவர் தெரிவித்தார்,

அமெரிக்கா மற்றும் எகிப்துடன் இணைந்து மத்தியஸ்தராக இருக்கும் கட்டார், தோஹாவில் நடந்த சந்திப்புகள் பேச்சுவார்த்தைக்கான ஒரு கட்டமைப்பில் கவனம் செலுத்தியதாகக் கூறுகின்றது, அதே நேரத்தில் பேச்சுவார்த்தைகளோடு தொடர்புடைய பலஸ்தீன அதிகாரி ஒருவர் “இதுவரை எந்த முன்னேற்றமும் அடையப்படவில்லை“ என தெரிவித்துள்ளார்

இந்த வாரம் தோஹாவில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் ட்ரம்பின் விசேட தூதுவர் ஸ்டீவ் விட்காப் கலந்து கொள்ளவிருந்தார்.

தற்போதைய கள நிலவரங்களைப் பொறுத்த வரை, வடக்கு காஸாவில் நடந்த மோதலில் ஐந்து இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டனர் - இது பலஸ்தீன ஆள்புலப் பிரதேசத்தில் இஸ்ரேலிய படைகளுக்கு இந்த ஆண்டின் மிக மோசமான நாட்களுள் ஒன்றாகும்.

இதற்கிடையில், செவ்வாயன்று இஸ்ரேலிய தாக்குதல்களில் 29 பேர் கொல்லப்பட்டதாக காஸாவின் சிவில் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலும் ஹமாஸ/ம் ஞாயிற்றுக்கிழமை தற்போதைய சுற்றுப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கின, பிரதிநிதிகள் ஒரே கட்டிடத்திற்குள் தனித்தனி அறைகளில் அமர்ந்திருந்தனர்.

வெள்ளை மாளிகையில், நெதன்யாகுவுக்கு எதிரே அமர்ந்திருந்த ட்ரம்ப், ஹமாஸ் காஸா மோதலை முடிவுக்குக் கொண்டுவர தயாராக இருப்பதாகக் தெரிவித்தார், இந்த யுத்தம் தற்போது 22 ஆவது மாதத்தில் உள்ளது.

தற்போதைய மோதல்கள் பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டையாக அமையாதா என ட்ரம்பிடம் கேட்கப்பட்ட போது “அவர்கள் சந்திக்க விரும்புகிறார்கள், யுத்த நிறுத்தத்தையும் அவர்களே விரும்புகிறார்கள்,“ எனத் தெரிவித்தார்.

வாஷிங்டனுக்கு நெதன்யாகுவுடன் வந்த ஒரு இஸ்ரேலிய அதிகாரி, கலந்தரையாடலில் உள்ள திட்டம் “இஸ்ரேல் விரும்பியதில் 80-90 சதவீதம்“ எனத் தெரிவித்தார்.

“இராணுவ மற்றும் அரசியல் அழுத்தத்தின் மூலம், அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்க முடியும் என்று நான் நம்புகிறேன்,“ என அந்த அதிகாரி இஸ்ரேலிய ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இஸ்ரேல் ஹயோம் நாளிதழின் ஏரியல் கஹானாவின் கூற்றுப்படி, “ஜனாதிபதி ட்ரம்பும் அவரது ஆலோசகர்களும் தற்போது பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு வழிவகுக்கும் எந்த ஒரு உடன்பாட்டையும் எட்டுவதற்கு கணிசமான முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர், மேலும் அது காஸாவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் கூடும்.“

இருப்பினும், தீவிர வலதுசாரி தேசிய பாதுகாப்பு அமைச்சர் இடாமர் பென் க்விர் ஹமாஸூடனான பேச்சுவார்த்தைகளை கடுமையாக எதிர்க்கின்றார். “எமது வீரர்களைக் கொலை செய்பவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியமில்லை அவர்கள் துண்டு துண்டாக வெட்டப்பட வேண்டும்“ எனத் தெரிவித்தார்.

காஸாவில் ஐந்து வீரர்களின் இழப்பை “இது கடினமான காலைப் பொழுது“ என நெதன்யாகு விவரித்தார், மேலும் “ஹமாஸைத் தோற்கடித்து எமது அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிப்பதற்கான போரில் தங்கள் உயிரைப் பணயம் வைத்த எமது வீரர்களுக்கு எனது இரங்கல்கள்“ எனத் தெரிவித்தார்.

வடக்கு காஸாவில் உள்ள பெய்ட் ஹனுன் அருகே நவீன வெடிபொருட்கள் காரணமாக இந்த இறப்புகள் நிகழ்ந்ததாக இஸ்ரேலிய இராணுவ ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த 2023 ஒக்டோபர் 27 ஆந் திகதியன்று தரைவழித் தாக்குதல் தொடங்கியதிலிருந்து காஸா இராணுவ நடவடிக்கையின்போது 450 வீரர்கள் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

பிரதேசம் முழுவதும் அண்மையில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களில் 29 பேர் கொல்லப்பட்டதாக காஸாவின் சிவில் பாதுகாப்பு நிறுவனம், தெரிவித்துள்ளது, இதில் மூன்று குழந்தைகள் அடங்குவர்.

தெற்கு காஸாவில் இடம்பெயர்ந்த மக்களுக்கான முகாமில் நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதாக அந்த நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் மஹ்மூத் பஸ்ஸல் தெரிவித்தார்.

“எனது நான்கு குழந்தைகளுக்கு காலை உணவை - பீன்ஸ் மற்றும் சிறிது ரொட்டி - தயாரித்துக்கொண்டிருந்தேன் அப்போது எனது கூடாரத்தின் முன் நான் இருந்தேன். திடீரென்று, ஒரு வெடிப்பு ஏற்பட்டது,“ என முகாமில் வசிக்கும் 30 வயதான ஷைமா அல்-ஷேர் கூறினார்.

காஸாவில் காணப்படும் ஊடகக் கட்டுப்பாடுகள் மற்றும் பல பகுதிகளுக்குச் செல்வதில் உள்ள சிரமங்கள் காரணமாக சிவில் பாதுகாப்பு நிறுவனம் வழங்கிய தரவுகள் மற்றும் விவரங்களை சுயாதீனமாக சரிபார்க்க முடியவில்லை என ஏ.எப்.பி தெரிவித்துள்ளது.

ஏ.எப்.பி தொடர்பு கொண்டபோது இஸ்ரேலிய இராணுவத்திடமிருந்து உடனடி கருத்து எதுவும் கிடைக்கவில்லை.

காஸாவின் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு யுத்தம் மிக மோசமான மனிதாபிமான நிலைமைகளை தோற்றுவித்துள்ளது.

ட்ரம்ப் நிர்வாகத்தின் முழு ஆதரவை இஸ்ரேல் பெற்றிருந்தாலும், அமெரிக்க ஜனாதிபதி காஸாவில் “நரகம்“ காணப்படுகின்றது என்று அழைத்ததை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அதிகளவில் அழுத்தம் கொடுத்து வருகிறார், மேலும் இந்த வாரம் ஒரு ஒப்பந்தம் ஏற்படுவதற்கான “நல்ல வாய்ப்பு“ இருப்பதாக நம்புவதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்திருந்தார்.

“மத்திய கிழக்கில் தற்போது ஜனாதிபதி ட்ரம்புக்கு மிகவும் முன்னுரிமை அளிக்கப்படுவது காஸாவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அனைத்து பணயக்கைதிகளையும் திருப்பி அனுப்புவதாகும்“ என வெள்ளை மாளிகையின் ஊடகப் பேச்சாளர் கரோலின் லீவிட் தெரிவித்தார்.

அமெரிக்க திட்டத்தில் 60 நாள் யுத்த நிறுத்தம் அடங்கும், இதன் போது இஸ்ரேலால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலஸ்தீனர்களுக்கு ஈடாக ஹமாஸ் 10 உயிரோடுள்ள பணயக்கைதிகள் மற்றும் பல உடல்களை விடுவிக்கும் என பேச்சுவார்த்தைகளோடு தொடர்புடைய இரண்டு பலஸ்தீன வட்டாரங்கள் முன்னர் தெரிவித்திருந்தன.

ஹமாஸ் அமைப்பினால் பேச்சுவார்த்தைகளின் போது சில நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன அவைகளுள் இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெறுதல், தாக்குதல்கள் மீண்டும் அரம்பிக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதம், மற்றும் ஐ.நா. தலைமையிலான உதவி விநியோக முறையைத் மீண்டும் ஆரம்பித்தல் ஆகியன அடங்குவதாக அவர்கள் தெரிவித்தனர்.

யுத்தம் உருவாகக் காரணமாக அமைந்த அக்டோபர் 2023 ஹமாஸ் தாக்குதலின் போது பலஸ்தீன போராளிகளால் பிடிக்கப்பட்ட 251 பணயக்கைதிகளில், 49 பேர் இன்னும் காஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர், இதில் 27 பேர் இறந்துவிட்டதாக இஸ்ரேலிய இராணுவம் கூறுகிறது.

ஹமாஸின் அக்டோபர் 2023 தாக்குதலில் 1,219 பேர் கொல்லப்பட்டனர், பெரும்பாலும் பொதுமக்கள் என இஸ்ரேலிய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் அடிப்படையிலான ஏ.எப்.பியின் கணக்கீடு தெரிவிக்கிறது.

இஸ்ரேலின் பதில் நடவடிக்கையில் காஸாவில் குறைந்தது 57,575 பேர் கொல்லப்பட்டுள்ளனர், அவர்களில் பெரும்பாலோர் பொதுமக்கள் என்று ஹமாஸ் ஆட்சி நடத்தும் பிரதேசத்தின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த புள்ளிவிவரங்கள் நம்பகமானவை என்று ஐ.நா. கருதுகிறது.

## ஈரான்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரானில் உள்ள அணு ஆராய்ச்சி மையங்களை குறிவைத்து கடந்த மாதம் 13ஆம் திகதி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதனை தொடர்ந்து இஸ்ரேல், ஈரான் இடையே போர் வெடித்தது. 12 நாட்கள் நீடித்த இந்த போரின்போது இஸ்ரேலுக்கு ஆதரவாக ஈரான் அணு ஆராய்ச்சி மையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. அமெரிக்க குண்டுவீச்சு விமானம் மூலம் ஈரான் அணு ஆராய்ச்சி மையங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன.

இதற்கு பதிலடியாக கட்டாரிலுள்ள அமெரிக்க விமானப்படைத்தளம் மீது கடந்த மாதம் 23ஆம் திகதி ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. கட்டாரில் உள்ள அல் அடிட் விமானப்படைத்தளத்தில் அமெரிக்க படைகள் நிலைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் அந்த விமானப்படைத்தளத்தை குறிவைத்து ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இந்த ஏவுகணைகள் வான்பாதுகாப்பு அமைப்பால் தகர்க்கப்பட்டதாக தகவல் வெளியானது.

இந்நிலையில், ஈரானின் ஏவுகணைகள் கட்டாரில் உள்ள விமானப்படைத்தளத்தை தாக்கியதாக அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த தாக்குதலில் விமானப்படைத்தளம் பாதிக்கப்பட்டதாகவும் ஆனால் உயிரிழப்பு சம்பவங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் அமெரிக்க பாதுகாப்புத்துறை செய்தித்தொடர்பாளர் இன்று (12) தெரிவித்துள்ளார்.

## துருக்கி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**


வெளியிட்டுள்ளன.

இதற்காக நேற்று (11) வடக்கு ஈராக்கில் ஒரு அடையாள விழா நடைபெற்றது. அதில் போராளிகள் தங்கள் ஆயுதங்களை மொத்தமாக எரித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரியில், குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியின் (PKK) நிறுவனத் தலைவர் அப்துல்லா ஒகலன், ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு அமைப்பைக் கலைக்க சிறையில் இருந்தபடி அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது எட்டப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அவரது விடுதலையும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக சுமார் நாற்பதாயிரம் மக்கள் உயிரிழந்த துருக்கிய - குர்திஷ் மோதல் இந்த ஒப்பந்தம் மூலம் முடிவுக்கு வந்துள்ளது.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 JULY 13 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# குருக்கள் மடம் கொலைகள் தொடர்பில்; உடனடி விசாரணை தேவை

கிழக்கு மாகாணம் குருக்கள் மடம் என்ற இடத்தில் கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு, அந்தக் குற்றத்தில் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற வலுவான கோரிக்கை முஸ்லிம் சமூகத்திடமிருந்து மேலோங்கியுள்ளது.

1990.07.12ஆம் திகதி புனித ஹஜ் கடமையை நிறைவு செய்துவிட்டு, வீடு திரும்பிய அப்பாவி முஸ்லிம்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

கடந்த 2014ஆம் ஆண்டு களுவாஞ்சிக்குடி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிவான், குறித்த மனிதப்புதைகுழி அமைந்துள்ள இடத்தை தோண்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, மன்றுக்கு அறிக்கையிட கட்டளை இட்டிருந்தார்.

எனினும் 04.10.2020 இல் சட்டமா அதிபரினால் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக குறித்த வழக்கானது கிடப்பில் போடப்பட்டிருந்தது.

எனினும் 11-07-2025 அன்று நகர்த்தல் பத்திரமொன்றில் ஊடாக, இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு எதிர்வரும் 21.07.2025 அன்று வழக்கு தவணையிடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்திலும், சமூக ஊடகங்களிலும் இதுதொடர்பிலான கருத்தாடல் நீடிக்கிறது. முஸ்லிம்களின் அதிகபட்ச ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம், இது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுப்பதும், ஏன், எதற்காக, எவரினால் இந்தப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை கண்டறிவதும் அவசியமாகிறது.

## உயிர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (11) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது கருத்து தெரிவித்த அவர்,

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் புலனாய்வுசெய்து விசாரணை மேற்கொள்ள ஒரு ஆணைக்குழுவே அமைக்கப்பட்டிருந்தது.

அந்த ஆணைக்குழுவில் உயர் நீதிமன்ற நீதியரசர் ஜனப்தசில்வா, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஸ்சங்க பந்துல கருணாரத்ன, மேன்முறையீட்டு நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் நிஹால் சுனில் ராஜபக்ஸ், மேல் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி அத்தபத்து லியனகே, ஓய்வுபெற்ற அமைச்சு செயலாளர் டபிள்யூ. என்,எம்,ஆர்.அதிகாரி ஆகியோர் அடங்குகின்றளர்.

அந்த ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை 2021 02,25அம் திகதி நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் விசாணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அதுதொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது.

அதன் பிரகாரம் சட்டமா அதிபரால் பரிந்துரைக்கப்படும் இறுதி பரிந்துரையை அடிப்படையாகக்கொண்டு எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள் அரசாங்கம் பின்வாங்காமல் நடவடிக்கை எடுக்கும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு, ஜனாதிபதி விசாரணை குழுவினால் வழங்கப்பட்டிருக்கும் பரிந்துரைகள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலாசேனையின் பிரகாரம் முறையாக செயற்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுப்போம்" என்றார்.

# ஒயாமடுவவில் சோபித வீட்டுத் திட்டம் மக்களிடம் கையளிப்பு

## பிரதமர், இந்திய தூதுவர் பங்கேற்பு!





(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

ஸ்ரீ சோபித வீட்டுத் திட்டத்தை பயணிகளிடம் கையளிக்கும் நிகழ்வு அனுராதபுரம் ஒயாமடுவ எல்பத்கமவில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரின் பங்களிப்புடன் (12) நடைபெற்றது.

வீட்டுத் திட்டத்துடன் தொடர்புடைய 115 வீடுகள் பயனாளிகளுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன. இந்த திட்டம் தற்போதைய அரசாங்கத்தின் தலையீடு மற்றும் இந்திய உதவியுடன் வணக்கத்துக்குரிய மாதுளுவாவே சோபித தேரர் குணஸ்மரண அறக்கட்டளையால் மேற்கொள்ளப்பட்டது.

வீட்டு பயனாளிகளுக்கு அடையாளமாக அவர்களின் வீடுகளின் சாவிகள் மற்றும் வீட்டு உரிமைப் பத்திரம் என்பன ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தந்திரிமலை ரஜமகா விஹாரையின் பிரதம விகாராதிபதி வணக்கத்துக்குரிய சந்திரா ரத்ன மகா சங்கத்தினருடன் கலந்து கொண்டதுடன் வர்த்தக வணிக உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி. சரத் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சேன நாணயக்கார மாதுளுவாவே சோபித தேரர் அறக்கட்டளையின் தலைவர் ரவி ஜயவர்தன வீடமைப்பு பயனாளிகள் மற்றும் கிராம மக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# “யாவருக்கும் உறையுள்” அஸ்மி யாசீனின் 16வது வீடு





சம்மாந்துறை பிரதேசத்தில் வசிக்கும் தேவையுடைய குடும்பங்களின் உறையுள் தேவைக்காக OCD அமைப்பின் தலைவரின் எண்ணக்கருவில் உருவான “யாவருக்கும் உறையுள் ” எனும் தொனிப்பொருளில் நிர்மானிக்கப்படவுள்ள 16 ஆவது வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு வியாழக்கிழமை(10) உடங்கா - 2 ஜமாலியா மஹல்லாக்குட்பட்ட பகுதியில் OCD அமைப்பின் அமைப்பாளரும் சம்மாந்துறை பிரதேசசபையின் உறுப்பினருமான ஆசிக் தலைமையில் நடைபெற்றது. இவ் அமைப்பின் தலைவரும், விஞ்ஞான முதுமானியும், சமூக சேவகருமான அஸ்மி யாஸீன் மற்றும் சம்மாந்துறை பிரதேசசபையின் தவிசாளரான ஐ.ல்.ம்.மாஹிர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து அடிக்கல் நாட்டிவைத்தார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேசசபையின் உறுப்பினர்களான எ.எச்.எம். காலித், எஸ்.எல்.எம்.பஹ்மி, எ.சி.எம்.நயீம், வை.எல். பசீல் மற்றும் முன்னால் வங்கி முகாமையாளரான மன்சூர் ஆகியோரின் பங்கேற்றிருந்தனர்.

# ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர் மீதான தாக்குதலை கடுமையாக கண்டிக்கிறேன்

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம் ஹரீஸ்

ஊடகவியலாளரும், சமூக செயற்பாடாளருமான நூருல் ஹுதா உமர் நேற்றிரவு தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த தாக்குதலை மேற்கொண்டவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்த தாக்குதல், ஊடகவியலாளர்களின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பை குறைக்கும் ஒரு முயற்சியாகும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஊடகவியலாளர்களின் சுதந்திரத்திற்கு உரிமைக்கும் மீறலை தடுக்க, சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஊடகவியலாளர்கள், சமூகத்தின் கண்காணிப்பாளர்களாக செயல்படுகிறார்கள். அவர்களுக்கு எதிரான தாக்குதல்கள், சமூகத்தின் சுதந்திரமான தகவல் பரிமாற்றத்தை பாதிக்கக்கூடும். எனவே, இந்த சம்பவம் மீது உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிலைமையில், சமூகத்தின் ஒற்றுமையும், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பும் முக்கியமாகும். எனவே இச்சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர்கள் உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த பொலிசார் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



இதன் மூலம் ஜனநாயக விரோதிகளின் வன்முறை போக்குகளுக்கு வெகுஜன தொடர்பு சுதந்திரம் இலக்காகுவதிலிருந்தும் விடுபட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

## சவூதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகத்தின் நகர அபிவிருத்தி திட்டத்தின் திறப்பு விழாவில் பங்கேற்பதற்காகவே இவர் இலங்கை வருகிறார்.

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சரான பிரதமர் ஹரினி அமரசூரியவின் பங்கேற்புடனான இந்த நிகழ்வு 14ஆம் திகதி திங்கட்கிழமை வயம்ப பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் கமூத் அல் கஹ்தானி மற்றும் ஆளும் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களும் பங்கேற்கவுள்ளனர்.

இந்த திட்டத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் திகதி வயம்ப பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்விலும் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டத்தின் ஊடாக வயம்ப பல்கலைக்கழகத்தின் குளியாப்பிட்டிய மற்றும் மாகுந்தர ஆகிய வளாகங்களில் மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவினையும் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுல்தான் அல் மர்ஷாட் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.




# மொழியை விருத்தி செய்யும் வாசிப்பு; வாசிப்பை விருத்தி செய்யும் மொழி

வாசிப்புக்கும் வாசிக்கின்ற மொழிக்கு இடையில் மிக நெருக்கமான தொடர்பு இருப்பது போலவே வாசகரது மொழியை கணிசமான அளவு விருத்தி செய்வதிலும் வாசிப்புக்கு பங்களிப்பு இருக்கின்றது. அதேபோல மொழியின் வீச்செல்லை எந்தளவு தூரம் அதிகரித்திருக்குமோ அந்தளவு தூரம் வாசிப்பின் வீச்சிலையும் அதிகரிக்கும். வாசிப்பின் வீச்செல்லை அதிகரிக்கின்ற அளவுக்கு மொழியின் வீச்செல்லையும் அதிகரிக்கும். ஒன்று இன்னொன்றில் தங்கி இருந்து உரம் சேர்க்கின்ற ஒன்றாகவே இரண்டும் சமாந்தரமாக பயணிக்கின்றது.

மொழிப் பஞ்சம் மிகைத்தவனிடம் வாசிப்புப் பஞ்சம் இருக்கும். வாசிப்பு பஞ்சம் உள்ளவனிடம் மொழிபஞ்சமும் இருக்கும்.

ஒரு வாசகன் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை கற்றுத் தெரிந்தவனாக இருப்பின் அவனுடைய வாசிப்பு விசேட அடைவு மட்டத்தில் இருக்கும். அதில் பல்சுவை ரசனையும் இருக்கும். அவன் ஒரு பக்கம் மொழியையும் அடுத்த பக்கம் வாசிக்கின்ற புத்தகம் எத்துறையில் எழுதப்பட்டிருக்கின்றதோ அந்தத் துறை சார்ந்த அறிவையும் வளர்த்து விரிவாக்கி உச்சம் தொடுகின்ற அந்த பயணத்திலே இணைந்து கொள்கின்றான் என்பதுதான் இதன் அர்த்தம்.

வாசிப்பு மனிதனின் இயல்பாக அமைந்து விடுகின்ற ஓர் அம்சம். பல போது அதை அவனது அடிப்படை தேவையாக இருக்கின்றது குறிப்பாக குழந்தை பருவம் முதல் உயர் கற்கை வரையில் வாசிப்பு அடிப்படையை தேவையாக அமைந்து விடுகின்றது அதுவே அவனது உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் காரணமாக அமைகிறது. கற்றல் துறையில் இருக்கின்ற ஒருவன் வாசிப்பை மறுக்கின்ற பொழுது வாழ மறுப்பதோடு தன்னுடைய எதிர்கால துறையை தீர்மானிக்கவும் மறுத்து விடுகின்றான். இயற்கை இயல்பும் மனித இயல்பும் சமூக இயல்பும் ஒன்றிணைகின்ற இடமாக வாசிப்பையும் அதற்கு களமும் தளமும் அமைக்கின்ற இலக்கியத்தையும் எங்களுக்கு அடையாளம் காட்டலாம்.

மனித வாழ்வை பொறுத்தளவில் அவனுக்கு தனிப்பட்ட வாழ்க்கை சமூக வாழ்க்கை தொழில் வாழ்க்கை என்ற பல்வேறுபட்ட பரிமாணங்கள் காணப்படுகின்றன. சமூக வாழ்க்கை தான் மொழியை தோற்றுவித்தது என கருத முடியும். வாசிப்பும் அத்தகையது தான் ஒரு மொழியிலேயே எழுதப்பட்ட ஒன்றை இன்னொரு மனிதனுக்கு கையெழுத்து விடுவது தான் புத்தகங்கள் செய்கின்ற மிக முக்கியமான பணி. இப்பணி மொழிக் கூடாகவே சாத்தியப்படுகிறது. மொழி இல்லாவிட்டால் புத்தகங்களும் இல்லை வாசிப்பும் இல்லை வாசகர்களும் இல்லை கருத்து பரிமாற்றங்களும் இல்லை விமர்சனங்களும் இந்த உலகத்திலே இருக்காது. மனிதர்கள் கண்டுபிடித்த கருவிகளுள் மிகவும் உன்னதமானதும் பயனுள்ளதுமான கருவியாக மொழியமைகின்றது. ஒரு வகையில் மொழியானது தொடர் பாடல் சார்ந்த கருவியாகவும் அமைகிறது. நாங்கள் ஒரு புத்தகத்தையோ அல்லது எழுத்தாக்கம் சார்ந்த விடயங்களையோ வாசிக்கின்ற பொழுது அந்த புத்தகத்தோடு மாத்திரமில்லாமல் அந்த புத்தகத்தை எழுதியவரோடும் அந்த புத்தகத்தின் உள்ளடக்கத்தோடும் எழுதப்பட்டிருக்கின்ற மொழியோடும் அதன் கலாச்சாரத்தோடும் பண்பாட்டோடும் தொடர்பு கொள்கின்றோம் என்பதுதான் அர்த்தம். இந்த வகையில் மொழி வழியிலான வாசிப்பு கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் இயல்புகளையும் சிந்தனைகளையும் ஆக்க திறன்களையும் ஆற்றல்களையும் பரஸ்பரம் ஒருவர் பலருக்கோ அல்லது ஒரு சமூகம் இன்னொரு சமூகத்துக்கும் அல்லது ஒரு முடி சார்ந்த குழுமம் இன்னொரு மொழி சார்ந்த குழுமத்துக்கோ கையளிப்பதற்கு மட்டுமின்றி அழகியல் சார்ந்த துறைகளிலும் மனித சிந்தனைகளை உருவாக்கவும் செதுக்கவும் வளர்க்கவும் வார்க்கவும் வழியமைக்கிறது

மனித வாழ்க்கை வரலாற்றை நோக்கினால் குழந்தையாக இந்த பூமியை வந்தடைந்தவனுக்கு சிந்திக்க கற்றுக்கொ டுக்கின்ற ஊடகம் மொழி என்பதற்கு முதல் தன்னுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு நாங்கள் மொழியை அவனுக்கு குழந்தை நிலையிலே கற்றுக் கொடுக்கின்றோம். எந்த அளவு தூரம் அவனிடத்திலே மொழி வளர்ச்சியும் மேம்பாடும் அடைகின்றதோ அவனுடைய கருத்துக்களும் சிந்தனைகளும் மிகத் துரிதமாக வெளிப்படுத்தப்படும் அவன் சமூகத்தோடு ஊடாட்டம் கொள்ள முனைவான். நாம் பயன்படுத்துகின்ற மொழி அழகானது. ஒவ்வொருவரது கருத்துக்களையும் உணர்வுகளையும் மனவெழுச்சிகளையும் வெளிப்படுத்துவதற்கு மொழியே களமமைக்கின்றன எந்த அளவுக்கு எங்களிடத்திலே மிகச்சரிவான செழுமையான மொழி இருக்குமோ அந்த அளவு தூரம் அவற்றை நாங்கள் கனங்காத்திரமான முறையில் வெளிப்படுத்த முடியும்.

உதாரணமாக எமது உட்கிடக்கைகளை உணர்வுகளை வெளிப்படுத்த மிகத் தரமான கவிதை மொழியை எமக்கு பயன்படுத்த முடியும். அதே போல எமது ஆக்ரோஷங்களையும் ஆவேசங்களையும் அழுத்தங்களையும் எதிர்பார்ப்புகளையும் அபிலாஷை களையும் வெளிப்படுத்தக்கூடிய அழுத்தமான மொழிப்பாவனை எமக்கு இருந்தால் அதனை அச்சு ஊடகத்தின் வழியாக எங்களுக்கு வெளிப்படுத்த முடியும். இப்படி மனித வாழ்வை மொழி செம்மைப்படுத்தி செதுக்கி செழுமைப்படுத்தி விடுகின்றது. எந்த அளவு தூரம் ஒருவன் மொழியில் காலூன்றி விடுகின்றானோ அந்த அளவு தூரம் அவனுடைய சிந்தனையும் வாழ்வும் செழிப்பாக அமையும்.

# இஸ்ரேல்-ஹமாஸ் யுத்த நிறுத்த பேச்சுவார்த்தையின் முதல் சுற்று இணக்கப்பாடின்றி முடிவடைந்தது

எம்.ஐ.அப்துல் நஸார்



பாலஸ்தீன வட்டாரங்களின் தகவல்களின்படி, யுத்த நிறுத்தம் தொடர்பான இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான மறைமுக பேச்சுவார்த்தைகள் இணக்கப்பாடின்றி முடிவடைந்தது.

கட்டாரின் தோஹாவில் நடைபெற்ற இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான முதல் சுற்று யுத்த நிறுத்த பேச்சு வார்த்தைகள் முடிவில்லாமல் முடிவடைந்ததாக பாலஸ்தீன வட்டாரங்கள் திங்களன்று (07) தெரிவித்தன.

'தோஹாவில் நடந்த மறைமுக பேச்சுவார்த்தைகளின் முதல் அமர்வுக்கு பின்னர், இஸ்ரேலிய பிரதிநிதிகளின் குழுவிற்கு ஹமாஸூடன் ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு போதுமான அதிகாரம் இல்லை, ஏனெனில் அதற்கு உண்மையான அதிகாரங்கள் இல்லை' என அந்த வட்டாரங்கள் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தன.

பேச்சுவார்த்தை இரண்டு வெவ்வேறு கட்டிடங்களில் நடந்ததாகவும், சுமார் மூன்றரை மணி நேரம் நீடித்ததாகவும் பிபிசி தெரிவித்துள்ளது.

கட்டார் மற்றும் எகிப்திய மத்தியஸ்தர்கள் மூலம் இரு தரப்பினரும் தொடர்பு கொண்டனர், ஆனால் எந்த பலனும் இல்லை. திங்கட்கிழமை மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.

திங்கட்கிழமை நடந்த கூட்டத்திற்கு பின்னர் காஸாவின் நிலைமை தொடர்பில் பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்கள் 'கடுமையான கவலையை' தெரிவித்தனர்.

'காஸா மீதான தொடர்ச்சியான இஸ்ரேலிய தாக்குதல்கள் மீண்டும் தொடங்கியுள்ளதாலும், மனிதாபிமான உதவிகள் அந்தப் பகுதிக்குள் நுழைவதைத் தடுப்பதாலும், ஆக்கிரமிக்கப் பட்ட பாலஸ்தீனப் பகுதியில் நிலவும் நிலைமை குறித்து நாங்கள் மீண்டும் எங்கள் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறோம்' என அவர்கள் கூறினர்.

சர்வதேச சட்டத்தை கடைப்பிடிக்குமாறும், உடனடி போர்நிறுத்தத்தை ஊக்குவிப் பதற்கும், காஸாவிலிருந்து இஸ்ரேலிய துருப்புக்களை மீளப் பெறுமாறும், அனைத்து கைதிகள் மற்றும் பணயக் கைதிகளையும் விடுவிக்குமாறும் மேற்படி அமைப்பு தெரிவித்திருந்தது.

ஹமாஸ் அமைப்பு மத்தியஸ்தர்க ளுக்கான தனது பதிலை 'நேர்மறையானது' எனத் தெரிவித்துள்ளதோடு உடனடி பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருப்பதை மீண்டும் வலியுறுத்தி யிருந்தது. மார்ச் மாதத்தில் இறுதியாக போர் நிறுத்தம் முடிவதற்கு முன்பு பயன்படுத்தப் பட்ட ஒரு முறையான காஸா முழுவதும் 400 க்கும் மேற்பட்ட இடங்களில் உதவி விநியோகத்தை ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று ஹமாஸ் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுஹைலின் வாழ்வைப் பந்தாடிய போலிசாரின் அசமந்தம்

## செவ்வாயன்று விடுதலை சாத்தியம்?

எம்.எஸ். அமீர் ஹுசைன்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 09 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள மாவனல்லையைச் சேர்ந்த இளைஞன் சுஹைல் சட்ட மா அதிபரின் ஆலோசனை பெறப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெஹிவலை பெலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அநுராத ஹேரத் அறிவித்தார். சுஹைல் கைது தொடர்பான வழக்கு 2025.07.09 ஆம் திகதி கல்கிச்சை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற போதே கல்கிச்சை மேலதிக நீதவான் ஹேமாலி ஹல்பந்தெனிய எழுப்பிய கேள்வியொ ன்றுக்கு தெஹிவலை பெலீஸ் நிலைய பொறுப்பதிகாரி பதிலளிக்கையில் தெரிவித்தார். இந்த வழக்கு தொடர்பான விசாரணை ஏற்கனவே 03 முறை நடைபெற்ற பின்னர் தொடர்ச்சியாக குறித் ,ளைஞன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்.

எவ்வாறாயினும் இந்த இளைஞன் தகுந்த காரணம் இன்றி கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 09 மாதங்களாக தடுத்து வைக்கப் பட்டிருக்கின்ற நிலையில் அவர் சார்பாக ஆஜராகி ,ருக்கின்ற சமூக நீதிக்கான அமைப்பின் சட்டத்தரணிகள் குழு இவரை விடுவிப்பதற்கான முயற்சிகளில் இறங்கி இருக்கின்றது. இந்த அமைப்பின் சார்பாக மன்றில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி கீத்ம பெர்னாண்டோ மற்றும் சட்டத்தரணிகளான ரஷாத் அஹமத், இல்ஹாம் ஹஸனலி, எம்,கே.எம். பர்ஸான் ஆகியோர் மன்றில் வாதங்களை முன்வைத்ததன் பிரதிபலனாக சுஹைலை விடுதலை செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது.

மாவனல்லையில் வசிக்கும் சுஹைலின் தந்தை சாதாரண ஒரு கூலித் தொழிலாளி ஆவார். மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த சுஹைல் 2024.10.23 ஆம் திகதி தெஹிவலை பெயர்ஸ்லைன் வீதியில் அமைக்கப்பட்டுள்ள இஸ்ரேலின் சபாரட் ஹவுஸ் (ஆராதனை மண்டபம்) அருகில் நின்றுகொண்டிருந்த போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பில் கற்கைநெறியொன்றை பயில்வதற்காகச் சென்று தங்குமிடம் ஒன்றை தேடுவதற்காக அவ்வீதியால் சென்ற போது அந்த இடத்தில் இருந்தார் என்ற காரணத்திற்கான கைதுசெய்யப்பட்ட இவர் 2024.10.24 ஆம் திகதி கல்கிச்சை மாஜிஸ்ரேட்டில் (நீதவான் நீதிமன்றம்) ஆஜர்படுத்தப்பட்டு அன்றைய தினமே நீதவானின் உத்தரவின் பேரில் விடுதலை செய்ய உத்தர விடப்பட்டிருந்தார்.



ஆனாலும் விடுதலை பெற்ற சுஹைலும் அவரது தந்தையும் அன்றை தினம் வீட்டிற்கு வந்து சேரும் பொது தெஹிவலை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி மாவனல்லை பொலீஸ் நிலையத்தின் அனுமதியுடன் சுஹைலின் வீட்டிற்கு வந்து வாக்குமூலம் ஒன்றை பெற்றுக்கொள் வதற்காக அழைத்துச் செல்வதாக கூறி மீண்டும் அழைத்துச் சென்று தடுத்து வைத்துள்ளனர் அதன் பின்னர் இடையிடேயே மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழே அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவரை விடுவிப்பதற்காக கடுமையான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் பலனற்ற நிலையில் குற்றச்சாட்டுக்களும் ,ன்றி அநியாயமான முறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

,ந்நிலையில் கடந்த 09 ஆம் திகதி மன்றில் ஆஜர்படுத்தப்பட் சுஹைலை எந்த விதமான குற்றச்சாட்டும் ,ல்லை என்றும் பிணையில் விடுதலை செய்யுமாறும் மன்றில் கோரிக்கை விடுத்-திருந்த நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட ஒருவரை விடுதலை செய்ய அல்லது பிணை வழங்க மாஜிஸ்ரேட் நீதவானுக்கு எந்த உரிமையும் ,ல்லை என்று நீதவான் தெரிவித்ததோடு பொலீசாரின் நடவடி-க்கைகள் தொடர்பாக அதிருப்தியையும் தெரிவித்திருந்தார். அது தொடர்பாக மன்றுக்கு பதிலளித்த தெஹிவலை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி அநுராத ஹேரத் எதிர்வரும் 2025.07.15 ஆம் திகதி சட்டமா அதிபாரை சந்தித்து கலந்துரையாடி அனுமதியை பெற்று சுஹைலை பிணையில் விடுவிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.



எவ்வாறாயினும் சுஹைலுக்கு எற்பட்ட நிலை எந்தவொரு இளைஞருக்கும் எற்படக் கூடாது. நாட்டில் எங்கு சென்றாலும் அந்த இடம் எப்படிப் பட்டது என்பதை அவதானித்து அதுவும் இஸ்ரேல் சம்பந்தப்பட்டுள்ள ஏதாவது இடங்களாக இருந்தால் எந்தக் காரணம் கொண்டும் அத்தகைய இடங்களில் நடமாடுவதை தவிர்ப்பது சிறந்ததும் பாதுகாப்பானதுமாகும்.

# இலங்கை விமானப்படை தளபதியை சந்தித்த கடற்படை தளபதி




( எம் எச் எம் சியாஜ்)

இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட இலங்கை விமானப்படை தளபதி ஏயார் மார்ஷல் பந்து எதிரிசிங்கவை (09) விமானப்படையின் தலைமையகத்தில் வைத்து சந்தித்தார். இராணுவம் மரபுகளின் படி நடைபெற்ற இந்த முக்கிய சந்திப்பிற்காக விமானப்படை தலைமையகத்திற்குள் நுழைந்த கடற்படை தளபதிக்கு மிக உயர்ந்த இராணுவ மரியாதையையும் பெருமையையும் பிரதிபலிக்கும் வகையில் சம்பிரதாயபூர்வ வரவேற்பு அளிக்கப்பட்டது இந்த உத்தியோகபூர்வ சந்திப்பின் போது விமானப்படை மற்றும் கடற்படை தளபதிகள் இருதரப்பு முக்கியதுவம் வாய்ந்த மூலோபாய பிரச்சினைகள் குறித்த கருத்துக்களை பரிமாறிக் கொண்டதுடன் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில் இரு பிரிவினரின் முக்கிய பங்களிப்புக்கள் மற்றும் சிறப்புகள், முக்கியத்துவம் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

# அனுராதபுர கல்வி வலய தடகள போட்டி நிறைவு விழா




(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

அனுராதபுரம் கல்வி வலய தடகள விழாவின் நிறைவு விழா வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தலைமையில் வடமத்திய மாகாண விளையாட்டு வளாகத்தில் நடைபெற்றது.

அனுராதபுரம் பகுதியில் உள்ள 127 பாடசாலை களைச் சேர்ந்த 3000 விளையாட்டு வீரர்கள் கொண்ட குழு பங்கேற்றது.

அனுராதபுரம் பிராந்தியத்தில் உள்ள 127 பாடசாலைகளில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெற்ற உடற்கல்வி ஆசிரியர்கள் குழுவினருக்கு ஆளுநர் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

அனுராதபுரம் பிராந்தியத்தில் உள்ள பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற குழுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கு ஆளுநர் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

# கடற்படையினரினால் நிறுவப்பட்ட மூன்று நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பொது மக்களிடம் கையளிப்பு




(எம். எச். எம். சியாஜ்)

இலங்கை கடற்படையின் சமூகப் பணித் திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தில் நிறுவப்பட்ட மூன்று மீள் நீர் சுத்திகரிப்பு நிலையங்களை பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் (05) இடம்பெற்றது.

அநுராதபுரம் மாவட்டத்தின் கலேபிடுனுவெவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள துட்டுவெவ கட்டாரம்புர பாடசாலை மற்றும் உல்பத்துவெவ ஆரண்ய சேனாசனம் மற்றும் ஹொரவபொத்தான பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஜாமியுல் மில்பார் ஜும்ஆ பள்ளிவாசல் ஆகிய மூன்று இடங்களில் கடற்படையினரின் தொழில்நுட்ப பங்களிப்புடன் ஜனாதிபதி செயலகத்தின் நிதி உதவியுடன் மீள் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு பொது மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இதுவரை இலங்கை கடற்படையினரால் நாடு பூராவும் 1112 மீள் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் ஒவ்வொன்றும் ஒரு நாளைக்கு சுமார் 10 ஆயிரம் லிட்டர் தண்ணீரை சுத்திகரிக்கும் திறன் கொண்டது. இதன் மூலம் ஏராளமான பொது மக்களின் சுத்தமான குடிநீர் தேவையினை எளிதில் பூர்த்தி செய்ய கூடியதாக இருக்கும் எனவும் கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

நோயற்ற வாழ்வு ஆரோக்கியமான மக்கள் என்ற அரச சுகாதார தொலை நோக்கு பார்வைக்கு ஏற்ப இலங்கை கடற்படை இந்த கடற்படை சமூகப் பணி திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாணந்துறை ஜீனியஸ்பார்கின் வருடாந்த பரிசளிப்பு விழா

GENIUSPARK Great Hopes Makes Great Genius HENAMULLA - PANADURA

(பி. எம். முக்தார்)

பாணந்துறை ஹேனமுல்லையில் 18 வருடங்களாக இயங்கும் ஜீனியஸ்பார்க் கல்வி நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (13) மொரட்டுவை, எகொட உயன அரபாத் முஸ்லீம் மகா வித்யாலயத்தில் அதன் பணிப்பாளர் ஹிமாயா இப்ராஹிம் தலைமையில் தினகரன் வார மஞ்சரி ஊடக அனுசரணையுடன் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் பிரதம அதிதிகளாக நஜீப் ஹாஜியார் கல்வி நிறுவனத்தின் தலைவர் கலாநிதி அல்ஹாஜ் நஜீப் அமீர் ஆலிம், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

இவர்களுடன் விசேட அதிதிகளாக எஸ்.ஐ.பி. அபாகஸ் கல்வி நிறுவனத்தின் தேசியத் தலைவர் ரிஷார்ட் ரஹீம் மற்றும் மருதானை கிளை பணிப்பாளர் எம். எப். நிரோஷா உட்பட சிரேஷ்ட ஊடகவியலாளர்களான பி.எம். முக்தார், ஏ.எல் .எம். சத்தார் ஆகியோருடன் பாணந்துறை பிரதேசத்தில் உள்ள பாடசாலையைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# நவசேனபுர அல் ஹிக்மா அஹதிய்யாவின் பரிசளிப்பும் மலர் வெளியீடும்




(எஸ்.எம்.எம்.முர்ஷித் )

பொலன்னறுவை மாவட்டத்தின் நவசேனபுர அல் ஹிக்மா அஹதிய்யா பாடசாலையின் 16வது ஆண்டு நிறைவை முன்னிட்டு பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் அதிபர் வை.எல்.எம்.றாபிக் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி.சரத் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் எம்.ரீ.எம்.நிஸ்வி வெலிகந்த பிரதேச சபையின் உறுப்பினர்கள், பொலன்னறுவை மாவட்ட உலமா சபை தலைவர் மௌலவி எம்.எம்.அலாவுதீன், பொலன்னறுவை மாவட்ட அகதியா பாடசாலைகளின் சம்மேளன பொது செயலாளர் ஜிப்ரி ராஸிக், அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளன உப தலைவர் தேசமான்ய ஏ.எல்.எம். அஸ்வர், முஸ்லிம் சமய கலாசார திணைக்கள கலாசார உத்தியோகத்தர் மௌலவி பி.டி.றவூப்தீன், வெலிகந்த பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். எம். ஹனிபா சேனபுர அல் அமீன் வித்தியாலய அதிபர் மௌலவி என். நிஸாமுதீன் பிரதேசத்தின் தொழில் அதிபர்கள் உலமாக்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றதோடு மாணவர்களுக்கான நினைவு சின்னமும்



சான்றிதழும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

மலர் அறிமுகத்தினை சேனபுர அல் அமீன் வித்தியாலய அதிபர் மௌலவி என்.நிஸாமுதீன் வழங்கியதுடன் நிகழ்ச்சி தொகுப்பினை அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளன உப தலைவர் தேசமான்ய ஏ.எல்.எம். அஸ்வர் நடாத்தி வைத்தார்.

# கண்டி சாஹிரா கல்லூரியில் வெற்றிகரமாக நடைபெற்ற கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்




(ரஷீத் எம். றியாழ்)

கண்டி கட்டுகஸ்தோட்டை சாஹிரா கல்லூரியில் (9) க்ளீன் ஸ்ரீலங்கா வேலை திட்டம் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது . கல்லூரி அதிபர் சட்டத்தரணி பைசால் முஹம்மத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் போது பாடசாலையின் சுற்றுச்சூழல் சுத்திகரிப்புகள் , மற்றும் டெங்கு நுளம்பு பரவாதிருக்கும் வழிவகைகளும் முன்னெடுக்கப் பட்டன.

இது தொடர்பாக மாணவர்களுக்கான அறிவுரைகளும் வழங்கப்பட்டன. அதிபர் , பிரதி அதிபர்கள் ஆசிரியர்கள் உட்பட கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர்.

# அரசுக்கு தலையிடி தரும் செம்மணியும் போதைப் பொருளும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

செம்மணி புதைகுழியில் இருந்து 2025.07.06 ஆம் திகதி வரை 47 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டு 44 சடலங்களின் எலும்புக் கூடுகள் முழுமையாக அகழப்பட்டிருக்கின்றன என்ற தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. அதனால் வடக்கில் போர்க் காலங்களில் காணாமலாக் கப்பட்டவர்கள் மத்தியில் இந்த எலும்புக் கூடுகள் ஒருவித பதற்ற நிலையை ஏற்படுத்தி வருகின்றது. அவை தமது உறவினர்களது சடலங்களின் ஏலும்புக் கூடுகளாகஇருக்குமோ என்ற சந்தேகமே இவ்வாறான ஒரு நிலை உருவாக காரணமாக அமைகின்றது. அதனால் விவகாரம் சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றது.

அப்போதைய இராணுவ லான்ஸ் கோப்ரல் நாசரத்ன ராஜபக்ஸ என்பவர் வழங்கிய தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இந்த செம்மணி புதைகுழி விவகாரம் வெளிச்சத்திற்கு வர ஆரம்பித்தது எனலாம். 1990 ஆம் ஆண்டு யுத்த காலப்பகுதியில் இவ்வாறு இராணுவத்தால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட தமிழர்களது சடலங்களே இங்கு புதைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்திருந்தார். இந்த இராணுவ அதிகாரி கிரிசாந்தி குமாரசுவாமி பாலியல் துன்புறத்தலுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட வழக்கில் பிரதான எதிரிகளில் ஒருவராவார்.

வடக்கில் இவ்வாறாக சந்தேகத்திற்கிடமான 200 இடங்களில் புதைகுழிகள் இருப்பதோடு அவற்றில் தற்போது சித்துபாத்தி மயாணத்தில் தற்போது புதைகுழி அகழ்வு நடைபெறுவதோடு கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சிறுவர்களது எலும்புக் கூடுகளும் அதனோடு பாடசாலை செல்லும் போது கடத்தப்பட்டு கொலை செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையிலான புத்தகப் பையும் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது பெரும் சர்ச்சைக்கு காரணமாக அமைகின்றது.

இப்போதிருக்கின்ற சந்தேகம் இவ்வாறான புதைகுழிகளுக்கும் புதைக்கப்பட்டிருப்பவர்கள் யுத்த காலப்பகுதியில் இராணுவத்தால் கொலை செய்யப்பட்டவர்களா அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களது எலும்புக் கூடுகளா என்ற பாரிய சந்தேகம் நிலவுகின்றது. ஆனாலும் இந்த செம்மணி புதைகுழி தோண்டும் படலம் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகும். அப்போதைய காலப்பகுதியில் சுமார் 20 எமும்புக்கூடுகள் அளவில் கண்டுபிடிக்கப்பட்டதோடு அது தொடர்பான விசாரணைகள் நீண்ட காலம் தொடரவில்லை. இடைநடுவில் செம்மணி சடலங்கள் போன்றே புதைந்து போன கதையாக மாறின. ஆனாலும் இராணுவம் அங்கு மக்களை கொன்று புதைக்கவில்லை என்று செம்மணி புதைகுழி விடயத்தில் ஒதுங்கிக் கொண்டிருக்கின்றது.

அப்படியானால் யாரால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டவர்களது சடலங் களின் ஏலும்புக் கூடுகள் வெளிப்படுகின்றன? அவை யாருடைய எலும்புக் கூடுகள் என்பதை எவ்வாறு அடையாளம் காண்பது? அதனை கண்டறிவதற்கான தொழில்நுட்பம் இந்த நாட்டில் இருக்கின்றனவா என்ற பலவிதமான கேள்விகள் எழுகின்றன. எதுவானாலும் இந்த அரசாங்கத்தின் மீது இப்படுகொலை கள் தொடர்பான குற்றச்சாட்டுக்ள சுமத்தப்பட நியாயம் இல்லை. இதற்கு முற்பட்ட ஆட்சியாளர்களே பொறுப்புக் கூறவேண்டியவர்களாக இருக்கின்றது. ஆனாலும் கண்டுபிடிக்கப்படுகின்ற சடலங்களை உாயி முறையில் அடையாளம் காண அரசாங்கம் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் போதும் என்று கூறலாம்.

மறுபுரமாக நாட்டில் போதைப் பொருள் பாவனையால் இளைஞர்கள் தமது பெறுமதி வாய்ந்த எதிர்கால வாழ்வை நாசமாக்கிக் கொள்ளக் கூடியவர்களாக மாறி வருகின்றனர். மிக இலகுவான முறையில் எந்த விதமான போதைப் பொருட்களையும் நாட்டில் எப்பாகத்திலும் பெற்றுக் கொள்ளும் நிலை இருப்பதால் பாடசாலைப் பருவ இளம் தலைமுறையினரில் துவங்கி வளர்ந்தவர்கள் வரையில் போதைப் பொருளுக்கு அடிமையாகும் அபாயகரமான நிலை அதி- கரித்துள்ளன. நகர்ப்புரம் கிராமப்புரம் என்று வேறுபாடு இன்றி எல்லா ஊர்களிலும் மூலை முடுக்குகளிலும் போதைப் பொருளுக்கு அடிமையான ஒரு இளைஞர் கூட்டம் இருப்பதை மிகவும் சர்வ சாதாரணமாக அவதானிக்க முடியும். ஒருவர் ஏதாவதொரு வகையான போதைப் பொருளுக்கு அடிமையாகிவிட்டால் அந்த நபரை புனர்வாழ்வளித்தாலும் அவ்வளவு இலகுவாக இயல்பு வாழ்க்கைக்கு திருப்பி விட முடியாத நிலை காண ப்படுகின்றமை இதன் மிக மோசமான பாதகமான விளைவாகும்.

போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகிய இளைஞர்கள் அல்லது இளம் பிள்ளைகள் இருக்கின்ற குடும்பங்களில் பெற்றோர் அவர்களை சமாளிப்பதற்காக தினமும் மிகவும் கடுமையான போராட்டம் நடத்தி வருகின்றனர். குடும்பங்களுக்குள் அமைதி, நிம்மதி கெட்டுப் போவதால் பல்வேறுவிதமான சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அத்தகைய குடும்பங்களுக்கு உதவிக் கரம் நீட்ட யாரும் முன்வருவதும் இல்லை. பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் இளைஞர்களு க்கும் நிவாரணமளிக்கும் வழிமுறைகளும் இலகுவானதாக இல்லை. எல்லா ஊர்களிலும் தடுப்பு நடவடிக்கைகள், விழிப்புணர்வு செயற்றிட்டங்கள், கண்காணிப்பு வழிமுறைகள் என்று இருந்தாலும் போதைப் பொருள் வியாபாரிகள் அத்தனை வழிகளையும் முறியடித்து தமது இலட்சியத்தை அடைவதாகவே இருந்து வருகின்றது.

அண்மைக் காலமாக போதைப் பொருள் தடுப்பு மற்றும் சுற்றி வளைப்பு பிரிவு நாட்டில் அதிகபட்ச தேடல்களை மேற்கொண்டும் சுற்றி வளைப்புக்களை செய்தும் நாட்டிற்குள் கடத்தி வரப்படுகின்ற பொருமளவான போதைப் பொருள் விநியோக புள்ளிகளை கைது செய்தும் உள்நாட்டிற்குள் போதைப் பொருட்களை கடத்தி வரும் மார்க்கங்களை தடை செய்தாலும் முற்றாக கட்டுப்படுத் துவதென்பது மிகவும் கடினமானதாகவே இருந்து வருகின்றது. பாடசாலை மாணவர்கள் மாணவிகள் மத்தியிலும் வெவ்வேறுவிதமான போதைப் பொருட்கள் அறிமுகமாகி வருவதால் மேலும் அச்சுறுத்தல் அதிகரித்திருக்கின்றது.

அதிலும் அண்மைக் காலமாக அவதானிக்கப்பட்டுள்ள நிலைமைகளின்படி உள்நாட்டு மூலப் பொருட் களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற எளிய வகை போதைப் பொருட்களாலேயே இவ்வாறான பாடசாலை மாணவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே மரபு ரீதியான போதைப் பொருட்களாக ஹிரோயின், ஹர்ஷஸ், கஞ்சா, அய்ஸ் என்பவற்றோடு தூள் என்ற புதுவகையான போதைப் பொருட்களும் அவற்றுக்கு மேலதிகமாக போதை மருந்து கலக்கப்பட்ட இனிப்பு வகைகளும், வில்லைகளும் புழக்கத்தில் இருப்பது கண்டறியப் பட்டிருக்கின்றன. இவ்வாறு போ- ாதைப் பொருட்களுக்கு அடிமையாகி விட்டால் அத்தகைய இளைஞர் யுவதிகள் மன உளைச்சலுக்கும், உளவியல் கோளாறுகளுக்கும் (சைகோ) ஆளாகி வருகின்றனர். தினமும் பெற்றோர் அவர்களுக்கு உரிய போதை மருந்தை பயன்படுத்த பணம் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கத் தவறினால் வீட்டுக்குள் வன்முறைகளில் ஈடுபடுதல், களவெடுத்தல், கொள்ளைகள் என்றும் அதையும் மீறி கொலைகள் என்று உச்சத்துக்கே சென்றுவிடுகின்றனர். அந்த சந்தர்ப்பத்தில் சமூக விரோத செயல்கள், சமூக சீர்கேடுகள் என்று அனைத்திற்கும் காரண கர்த்தாக்களாக மாறி விடுகின்றனர்.

இத்தகையவர்களால் ஒருபோதும் வெளியே வர முடியாது. போதைக்கு அடிமையானவர்களது மூளை முற்றாக பாதிக்கப்பட்டு இயல்பான செயற்பாடு அற்றுப் போய் விடுகின்றது. ஒன்றில் கடுமையான தீராத நோய்களுக்கு ஆளாகுதல்.

அண்மையில் புழக்கத்திற்கு வந்துள்ள புகையிலை, சுண்ணாம்பு, பாக்கு மற்றும் வேறும் இரசாயன திரவங்களை கலந்து தயாரிக்கின்ற தூள் என்ற போதையூட்டக் கூடிய ஒருவகையான பொருள் காரணமாக அதிகமான பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வாய்ப் புற்றுநோய்க்கு ஆளாகின்ற பயங்கரமான நிலை காணப்படுகின்றது.

மறுபக்கத்தில் போதைப் பொருட்களை விற்பனை செய்பவர்களுக்கும் அதை விட்டு வெளியே வரமுடியாத நிலை. அவ்வாறு வெளியே வர முயற்சி செய்தால் பெரும் புள்ளிகளால் கொலை அச்சுறுத்தல் அல்லது கண்ட இடத்தில் சுட்டுத் தள்ளுவது. அண்மைக்காலமாக இத்தகைய கொலைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

2025.06.30 ஆம் திகதி கஹவத்தை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள ஒரு சம்பவத்தில் பொலீசார் போன்று வேடம் தரித்த இளைஞர்கள் குழுவொன்று இரண்டு இளைஞர்களை கடத்தி ஜீப் வண்டி ஒன்றில் ஏற்றிச் சென்று காட்டுப் பகுதி ஒன்றுக்கு கொண்டு போய் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு இளைஞர் கொல்லப் பட்டுள்ளார். ஒருவர் காயமடைந்துள்ளாா. இருவரையும் கையில் விலங்கு போட்டே கடத்திச் சென்றுள்ளனர்.

இதே போன்று சில வாரங்களுக்கு முன்னர் மாவனல்லை பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்டார். அப்பிரதேசத்தில் உள்ள போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு கும்பலாலே இந்த இளைஞரை கடத்திச் சென்று அடித்து சித்திரவதை செய்து குற்றுயிராக இருந்த நிலையில் அவர் இறந்து விடுவார் என்று நினைத்து வீட்டு வாசலில் போட்டுச் சென்றுள்ளனர். பின்னர் அவரை கண்டி ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அப்போது அவர் உயிர் பிரிய முன்னர் பொலீசாருக்கு கொடுத்துள்ள வாக்கு மூலத்தில் தன்னை கடத்தியவர்கள் மிக மோசமான முறையில் சித்திரவதை செய்தனர் என்றும் சிறுநீரகங்கள் கரைந்து என்ன நடந்தது என்பதை கண்டு பிடிக்க முடியாதபடி விஷத்தன்மை கொண்ட ஊசி ஏற்றியதாகவும் தெரிவித்திருந்தார். அவரின் பின்துவாரம் ஊடாக உடம்பிற்குள் இரும்புக் கம்பியை செலுத்தி சித்திரவதை செய்திருந்ததாக மருத்துவ ஆய்வு அறிக்கைகள் கூறின. இவ்வாறு கொலை செய்ய காரணம் இவர் போதைக்கு அடிமையாகி இருந்ததோடு குறித்த இளைஞர்களுக்கிடையில் போதைப் பொருள் விற்பனையில் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் என்று மாவனல்லை பொலீசார் தெரிவித்தனர்.

அதே போன்று நாட்டில் பல இடங்களில் இவ்வாறான படுகொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. 2024 ஆகஸ்ட் மாதத்தில் இருந்து 2025 ஜூன் மாதம் வரையில் இவ்வாறாக கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 56 என்று பொலீசாரின் புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது. கொழும்பில் நீதிமன்ற வளாகத்திற்குள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அண்மையில் சர்வதேச போதைப் பொருள் வர்த்தகர் கொலை செய்யப்பட்டார். இந்த கொலையுடன் சம்பந்தப்பட்ட ஒருவரை பொலீசார் உடன் கைது செய்தாலும் பிரதான சூத்திரதாரி என்று கருதும் இசாரா செவ்வந்தி என்ற பெண்ணை இதுவரையில் தேடி கண்டுபிடிக்க முடியவில்லை. இவரை 11 பொலீஸ் குழுக்கள் நாடு முழவதிலும் 200 இடங்களில் தேடி சோதனை நடத்தியும் இதுவரையில் கண்டு பிடிக்க முடியவில்லை. இவர் எப்படியோ டுபாயில் இருக்கும் பெரும் போதைப் பொருள் வர்த்தக சூத்திரதாரி இருக்கும் இடத்திற்கு தப்பிச் சென்றிருக்கலாம் என்று புலனாய்வுத் துறை சந்தேகிக்கின்றது.

அந்தளவிற்கு போதைப் பொருள் வியாபாரிகளின் சர்வதேச வலைப்பின்னல் பலம் பொருந்தியதாக இருந்து வருகின்றது. அதனை முறியடிப்பதென்பது மிகவும் சவால் மிக்கதாக இருந்து வருகின்றது. டுபாய், கடார், சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் இருக்கின்ற பெரும் புள்ளிகளின் வழிநடத்தலில் உள்நாட்டில் திட்டமிட்ட அடிப்படை யில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு இத்தகைய போதைப் பொருள் விநியோகஸ்தர்களின் புலனாய்வு சேவையும் மிகவும் பலம் வாய்ந்ததாக இருந்து வருகின்றது. போதைப் பொருள் தொடர்பாக பொலீசாருக்கு ததகவல் கொடுப்பவர்களை திட்டமிட்ட அடிப்படையில் அச்சுறுத்துவது, மிரட்டல் செய்வது மற்றும் கொலை செய்வது போன்ற செயல்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றன. இவர்களால் கோடிக்கணக்கில் பணம் அள்ளி வீசப்படுகின்றது.

மறுபுறமாக போதைப் பொருள் பாவனையால் சமூகம் மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் பொலீசார் மீதும் கடுமையான குற்றச்சட்டுக் களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. பொலீசாருக்கு போதைப் பொருள் தொடர்பான தகவல் கொடுத்தால் அந்த தகவல் கொடுப்பவர்கள் பற்றிய விபரங்களை போதைப் பொருள் கும்பல்களுக்கு ஒருசில பொலிசாரே வழங்குகின்றனர். அதனால் பின்னர் இத்தகைய போதைப் பொருள் வியாபாரிகளது அடியாட்களால் தகவல் கொடுப்பவர்கள் கொலை செய்யப் படுகின்றனர். அதனால் மக்கள் ஊர் ஊராக போதைப் பொருள் காரணமாக மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்ட நிலையில் தடுப்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் பரிதவிக்கின்றனர்.

அண்மையில் மாவனல்லையில் ஹெம்மாதகமையில் அப்பிரதேச பொலீசாரில் நம்பிக்கை இழந்த மக்கள் போதைப் பொருள் விற்பனை செய்கின்ற ஒருவரை பிடித்து மரத்தில் கட்டி பின்னர் கேகாலை உதவிப் பொலீஸ் அத்தியட்ச- கருக்கு தகவல் வழங்கி பிடிக்கப்பட்ட- வரை ஒப்படைத்திருந்தனர். அத்துடன் ஹெம்மாதகமை பொலீசாருக்கு எதிராக வீதியில் இறங்கி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். இவ்வாறாக சட்டம் ஒழுங்கை சரியான முறையில் அமுல்படுத்த வேண்டிய பொலீசாரே போதைப் பொருள் வியாபா- ரிகளது பணத்திற்கு விலைபோகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள் பொலீஸ் சேவையின் கண்ணியத்திற்கும் மரியாதைக்கும் களங்கம் கற்பிப்பதாக இருந்து வருகின்றது. அதனால் பொலீசார் உரிய முறையில் நடவடிக்கைகள் எடுக்காததன் விளைவே இவ்வாறாக நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் பயன்பட வேண்டிய விலை மதிக்க முடியாத மூளை வளம் அழிக்கப்பட்டு வருவது கவலை தருவதாக இருக்கின்றது.



இத்தகைய போதைப் பொருளுக்கு அடிமையாகும் இளம் தலைமுறையினரை பாதுகாக்க வேண்டியது அவசர தேவையாகும். அதற்காக நிலையான 24 மணித்தியாலங்க ளும் செயற்படுத்தக்கூடிய திட்டம் தேவைப் படுகின்றது. ஒவ்வொரு ஊரிலும் யார் யார் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுகின்றார்கள் என்பதை பிரதேச மக்கள் அறிந்து வைத்திருந்தாலும் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்ற கவலையில் இருந்து வருகின்றனர். சில நேரம் மக்கள் ஆத்திரத்திலும் அவசரத்திலும் போதைப் பொருள் விற்பனையாளர்களுக்கு எதிராக சட்டத்தை கையில் எடுக்கின்ற நிலைமைகளும் உள்ளன. ஆனாலும் அவ்வாறான நிலைமைகள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். அதனால் அரசாங்க மட்டத்தில் பொலீசார் மீது மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். போதைப் பொருளை சமூகத்தில் இருந்து ஒழிப்பதற்கான திட்டங்களை இயன்ற வகையில் சமூக மயப்படுத்தி சட்டத்தைக் கொண்டு ஒழிப்பதற்கான வழிகாட்டல்களை செய்ய வேண்டியது அவசியமாகின்றது. இன்றேல் நாட்டில் இருக்கின்ற 44 இலட்சம் பாடசாலை மாணவர்களையும போதைப் பொருளுக்கு அடிமையாவதில் இருந்து பாதுகாக்க முடியாமல் போகலாம். ஒவ்வொரு வீட்டிலும் பிள்ளைகள் போதைப் பொருளுக்கு அடிமையாகி பெற்றோர்களுக்கும் சமூகத்திற்கும் அச்சுறுத்தலாக மாறுவதை தடுக்க முடியாமல் போகலாம். இவ்வாறான ஒரு ஆபத்தான நிலை ஏற்படாமல் நாடு பாதுகாக்கப்பட வேண்டும். போதைப் பொருளை சமூகத்தில் இருந்து முற்றாக ஒழித்து போதைப் பொருள் அற்ற சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப நாட்டில் இருக்கின்ற போதுமான சட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தி பாதுகாப்புத் துறை தகுந்த நடவடிக்கையில் இறங்கினால் மக்களின் பூரண ஒத்துழைப்பால் இளம் தலைமுறையினரை பாதுகாக்க முடியும்.

# இலங்கை முஸ்லிம் சமூகத்தின் குடும்ப முறைமை மறுசீர்திருத்த நோக்கு



NALEEM RAFEEK
(naleemi)
MSC (R),BA, PGD IN PSY,
DIP IN COUNSELING,
NDTHRD (IPM),
SPCL IN ISLAMIC PSYCHOLOGY
VISITING LECTURER ,
TRAINER



சமகால இலங்கை முஸ்லிம் சமூகம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. அவற்றில் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் ஆன்மாவாக மதிக்கப்படக்கூடிய, மதிக்கப்பட வேண்டிய குடும்ப அமைப்பு சிதைந்து வருவது எம்மை திடுக்கிட வைக்கிறது.இலங்கை முஸ்லிம் சமூகத்தில், வருடாந்தம் நடை பெறுகின்ற திருமணங்கள் 18,000. அவற்றில் 2500 குடும்பங்கள் ஏறத்தாழ விவாகரத்தில் முடிகின்றன என இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் அறிக்கை கோடிட்டு காட்டுகின்றது .கவலைக்குரிய அல்லது அதிர்ச்சி தரக்கூடிய விடயம் என்னவெனில் அவற்றில் பெண்களால் கோரப்படும் விவாக விடுதலை 80 சதவீதத்தை தொட்டிருக்கிறது என்பதாகும். ஏறத்தாழ இலங்கையில் காணப்படும் 65 காழி நீதிமன்றங்களின் கதவுகளை தட்டுகின்ற இளம் தம்பதியினரின் தொகை அதிகரித்து வருவதாக அதிர்ச்சி அளிக்கும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.சமூக செவைத் திணைக்களத்தின் அறிக்கையின் படி, ஒரு நாளைக்கு 400 விவாக ரத்துக்கள் பதிவு செய்யப்படுகின்றன.மேலும் கொளும்பு பலகலைக்கழக வெகுஜன ஊடகப் பிரிவின் ஆய்வுப்பிரிவு , இலங்கையில் திருமணமான பெண்களில் 25 % விவாக ரத்து பெற்றவர்களாவர் என்கிறது.மேல் மாகாணத்தில்தான் அதிக விவாகரத்துக்கள் பதிவாகியுள்ளன.அதிகமான விவாகரத்துக்கள் திருமணம் முடித்து முதல் வருடத்தில் நிகழ்கின்றன என சமூக செவைத் திணைக்கள ஆய்வுகள் உறுதிப் படுத்துகின்றன.

ஒரு சமூகத்தின் அடித்தளம் குடும்பமாகும் .வளமான ஒரு நாட்டின் அத்திவாரம் அதன் வளம் மிக்க குடும்ப அலகுகள் ஆகும். குடும்பத்தின் பலம் ஒரு நாட்டின் சமூகத்தின் பலமாகும் .அதன் பலவீனம் ஒரு சமூகத்தின் நாட்டின் பலவீனமாகும். இஸ்லாமிய கண்ணோட்டத்திலும் பொதுவாக மனிதவியல் பார்வையிலும் குடும்பம் என்பது, ஒரு சமூகத்தின் சிந்தனை, விழுமியங்கள், ஒழுக்க விழுமியங்கள் ,வரலாறு, ஆளுமை பண்புகள் ,மனப்பாங்குகளை நகர்த்திச் செல்லும் முதலாவது முக்கிய ஊடகமாகும். ஒரு சமூகத்தை ,ஒரு தலைமுறையை காத்து, வளர்த்து, போஷித்து ,அரவணைத்து. சிறந்த தலைமைகளாக உருவாக்கும் பணியை செய்வதற்கு குடும்ப நிறுவனத்தை விட வேறு சிறந்த நிறுவனம் ஒன்று கிடையாது என்பதுவே அல்குர்ஆனின் அடிப்படையான கோட்பாடாகும். எனவே தான் அல்குர்ஆன் தலைமைகளை உருவாக்கும் ,தலைமுறைகளை புடம் போடும், மனித ஆளுமைகளை வடிவமைப்பதற்குமான ஓர் "கடுமையான ஒப்பந்தம்" தான் திருமண வாழ்வு என வலியுறுத்தி கூறுகின்றது.

இலங்கை முஸ்லிம் சமூகம் இது குறித்து எவ்வாறு சிந்திக்க வேண்டும், குடும்பவியல் பிரச்சனைகளை எவ்வாறு விஞ்ஞான ரீதியாக அணுக வேண்டும், வெறும் உணர்ச்சி மயப்பட்ட உரைகள், பயான்களுடன் மட்டும் சுருக்கிக் கொள்ளாது, பயிற்றுவித்தல் training & development கண்ணோட்டத்தில் அவற்றை எவ்வாறு அணுகுவது, குடும்பவியல் பிரச்சனைகளை அணுகுவதற்கான ஒரு முழுமையான செயல்திட்டத்தை உருவாக்கி அதனை நாடு தழுவிய ரீதியில் எவ்வாறு பிரயோகிப்பது ,என்பது குறித்து சிந்திப்பதற்கான ஆலோசனை ,வழிகாட்டல் முன்மொழிவுகளை எடுத்துச் சொல்வதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

இலங்கை முஸ்லிம்களின் குடும்பப் பிரச்சினைகளின் பின்னணி

சிறுபான்மையாக வாழக்கூடிய நாங்கள் குடும்பவியல் பற்றி சிந்திக்கின்ற போது அதன் முக்கியத்துவம் பல மடங்காக அமைகின்றது. ஏனெனில் சிறுபான்மையினர் எப்போதும் பெரும்பான்மையினரின் , வெளி சிந்தனைகளின் மற்றும் கலாச்சார பாதிப்புகளின் தாக்கத்திற்கு அவசரமாக உட்படுவது இயல்பாகும்.

அதே வேலை இஸ்லாமிய வாழ்க்கை முறை , இஸ்லாமிய சிந்தனை , அல்குர்ஆனிய குடும்பவியல் வாழ்க்கை அமைப்பு போன்றவற்றை படிப்பதற்கும் கண்களால் காண்பதற்குமான வாய்ப்புகளும் வசதிகளும் மிகக் குறைவாகவே இருக்கும். இலங்கை முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியல் கட்டமைப்பை பொறுத்தவரை பெரும்பான்மை சமூகங்களுக்கு மத்தியில் சிதறுண்ட , நிலத் தொடர்பற்ற சமூக அமைப்பை கொண்டுள்ளது .அரசு அதிகாரத்திலோ சமூக நிறுவனங்களான பாடசாலைகள் , பல்கலைக்கழகங்கள், கல்வி நிலையங்கள் , ஏனைய சமூக கலாச்சார நிறுவனங்களில் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கும் எங்களுக்கு இல்லாததனால் எங்களை பாதுகாக்க , தலை முறைகளை உருவாக்க பயிற்றுவிக்க , இந்த நாட்டிற்கு விசுவாசம் உள்ள நல்லொழுக்கமுள்ள பிரஜைகளை கட்டி எழுப்ப , எங்களுக்கென்றே உரிய எங்களது கட்டுப்பாட்டில் உள்ள, ஒரே ஒரு நிறுவனம் குடும்ப நிறுவனம் மட்டுமே என்பதை நாங்கள் ஆழமாக உள்ளத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் எமது சமூகத்தின் மாற்றம் சீர்திருத்தம் எங்கிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற தீர்க்கமான வினாவிற்கான தீர்க்கமான பதில் குடும்பத்தில் இருந்தே ஆகும் என்பதனை தவிர்க்க முடியாமல் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளோம்.

அப்படியாயின் குடும்ப நிறுவனத்தை சரியாக வழி நடத்த ,நெறிப்படுத்த ,கட்டியெழுப்ப, பாதுகாக்க எம்மிடம் என்ன வகையான வேலை திட்டங்கள் காணப்படுகின்றன. , .அதனை எவ்வாறு உருவாக்குவது? யார் அதனை மேற்கொள்வது? யார் அதற்கு பொறுப்பாளர்களாக இருப்பது? என்பதே எமக்கு முன்னால் உள்ள அடிப்படை பிரச்சனைகளாகும் என நான் நினைக்கின்றேன்.

குடும்பப் பிரச்சினைகளை புரிந்து கொள்ளல்

இலங்கை முஸ்லிம் குடும்பங்கள் முன்னே எப்போதும் இல்லாத அளவிற்கு படிப்படியாக சிதைவடைந்து செல்கிறது என்பது பரவலாக பேசப்பட்டு வருகிறது .அது குறித்த துல்லியமான ஆய்வுகள் முறையான கணிப்பீடுகள் காணப்படாவிட்டாலும் கூட இத்துறை சார்ந்த காழி நீதிபதிகள், உள சமூக செயற்பாட்டாளர்கள், சமூக நிறுவனங்கள் போன்றவற்றின் கருத்துக்களும் உத்தியோக பூர்வமற்ற புள்ளி விவரங்களும் இதனை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. நகர கிராம வேறுபாடுகளின்றி, படித்தவர் பாமரர் வேறுபாடு இன்றி குடும்ப பிரச்சினைகள் விவாகரத்துகள் அதிகரித்து வருகின்றன. இன்று பலருக்கு குடும்ப வாழ்வு கசந்து பிள்ளைகளுக்காக அல்லது சமூகத்திற்காக போலியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது அதனை உளரீதியான விவாகரத்து (emotional divorce)என்று கூறுவர். விளைவாக இளைஞர்கள் மத்தியில் சமூகத்தில் குற்றச் செயல்கள் சமூக எதிர்வினை செயற்பாடுகள் போதைப்பொருள் பாவனை ஒழுக்க சீர்கேடுகள் கல்வியில் ஆர்வமின்மை ஆன்மீகத்தில் ஈடுபாடின்மை போன்றவற்றிற் கான முதன்மையான காரணமாக சீரான பிள்ளை வளர்ப்பு இன்மையே என்று கூறினால் அது மிகையாகாது அதற்குப் பின்னால் இருப்பதும் குடும்பச் சிதைவாகும். கணவன் மனைவி தெருவில் விடுகின்ற தவறுகள் மற்றும் திருமணம் முடித்தல் என்பது இன்று கடினமான பாரிய செலவு மிக்க ஒரு சுமையான விடயமாக மாறி உள்ளது .இது பல சமூக சீர்கேடுகளை உருவாக்கி இருக்கிறது.

இன்று குடும்பங்கள் பிரச்சினைகள் என்று மேகங்களால் சூழப்பட்டு காணப்படுகின்றது. குடும்பங்களின் தனிமனிதர்கள் வாழ்வில் சோர்வு னநிசநளளைழை நிலை உருவாகி யுள்ளது. அவசரமும் பதற்றமும் நிறைந்த இயந்திர மயமான சமூக சூழலில் திருமணம் இன்று விழாக்களாக, ஒரு கேளிக்கையாக, ஒரு கூத்தாக பார்க்கப்படும் அளவிற்கு அது ஒரு வாழ்க்கையாக பார்க்கப்படுவதில்லை. திருமண விழாவிற்கு றநனனைபை பல தயாரிப்புகள் திட்டங்கள் தீட்டப்படுகின்ற.ன ஆனால் ஒரு அழகான குடும்ப வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்பதற்கான எந்த தயாரிப்போ அது பற்றிய அறிவோ இல்லாத ஒரு சூழலில் வாழ்கிறோம். இன்று எல்லாமே அவசரமாக மாறி உள்ளது. அவசரமாக திருமணம் பேசி ,அவசரமாக திருமணம் முடித்து ,அதனை விட அவசரமாக பிரிந்து போவார்கள் .இதன் விளைவாக கல்வி , படிப்பித்தல், உணவு, தொழில், தொழுகை, திக்ரு எல்லாமே அவசரமாக மாறிவிட்டது .

இன்று குடும்பப் பிரச்சினைகளை காழி நீதிமன்றம் வரை எடுத்துச் செல்ல அடிப்படையான காரணம் கயளவ கழழன போல அவசரமான தீர்வுகளை எதிர்பார்ப்பதனால் ஆகும் .கணவன் மனைவியை, மனைவி கணவனை மனிதப் படைப்பாக அன்றி, ஒரு ரோபோவாக, ஒரு இரும்பாக , AI யாக பார்க்கத் தொடங்கியுள்ளனர். பொறுமை சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல் , தாங்கு திறன் என்பன குடும்ப வாழ்வில் இன்று பெயரளவிலும் இல்லை . குடும்ப சண்டைகள் ,வன்முறைகள், பழிவாங்கல் ,ஈகோ, திமிரு என்பனவே குடும்பங்களை ஆட்சி செய்து . அழித்துக் கொண்டிருக்கின்றன.

திருமணம் என்பது இன்று ஒரு சுமையான கடுமையான காரியமாக மாறி உள்ளது. திருமணத்திற்காக தயாராகும் ஆண், திருமணத்திற்காக தயாராகும் பெண் வீட்டார், பல சுமைகளை பல செலவுகளை சுமக்க வேண்டி உள்ளனர் .பெண் வீட்டார் பல படிகள் மேலே சென்று அதனை சுமக்க வேண்டியுள்ளனர் .அதே நேரம் ஒரு ஆணுக்கு பல சகோதரிகள் இருந்தால் அவரும் தனது வாழ்க்கையை அதற்காகவே மட்டும் வாழ்ந்து அதற்காகவே அழிந்து போக வேண்டிய சூழலில் இருக்கிறோம்.

நடைமுறையில் உள்ள வானத்தை முட்டும் செலவுகள் , இன்று ஒரு சவாலாக மாறி உள்ளது அதனால் பெண்ணும் வீட்டுக்கு வெளியே அல்லது வீட்டுக்குள்ளே இருந்து ஏதோ ஒரு தொழிலை செய்து சம்பாதிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார். சில நேரங்களில் ஆண்கள் அதற்காக வெளிநாடு செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்படுகிறார்கள் .இது சமூக வாழ்க்கையில் பல பிரச்சனைகளை தோற்றுவித்திருக்கிறது. உதாரணமாக குடும்பத்தில் ஒரு தாய் நிர்பந்தமாக தொழில் செய்பவளாக மாறும் போது கணவனை கவனிப்பதில் .பிள்ளைகளை மிக சிறந்த முறையில் வளர்ப்பதில் பல சிரமங்களை எதிர்கொள்வாள். இதனால் கணவன் வழி பிறழ்ந்து செல்ல ,பிள்ளைகள் சீர் கெட்டு போக காரணமாக அமையலாம் . திருமண செ.லவு அதிகரிக்கும் போது பெண்களின் திருமண வயது நீண்டு செல்கின்றது .அது இன்னும் பல சிக்கல்களை கொண்டு வரும். சில போது சமூகத்தில் விபச்சாரம் பரவுவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமையலாம். மனநலமும் உடல் நலமும் கொண்ட ஒரு .தலைமுறை உருவாகுவது சாத்தியமற்றதாக மாறலாம் . உழைத்து களைத்து , ஹராமான ஆபாசம் நிறைந்த சூழலிலே முட்டி மோதி உள்ளமும் உடலும் உடைந்து போய், பல பிரச்சனைகளால் தாக்குண்டு வீடு வரும் ஆணுக்கு ,கணவனுக்கு, ஒரு பெண்ணின் குளிர்ச்சியான பார்வையும், மென்மையான உரையாடலும் ,அவளது ஸ்பரிசமும் மட்டுமே ஒரு ஆணுக்கு அமைதியை ,ஆறுதலை கொடுக்க முடியும் .அவ்வாறே வீட்டிலே காலையில் எழும்பியது தொடக்கம் தூ ங்கும் வரை பல வேலை பளுக்களோடு முட்டி மோதி மனதிலே பல எண்ணங்களை சேர்த்து வைத்துக் கொண்டு தனது அன்புக்குரிய கணவனிடம் அதனை ஒப்புவிக்க வேண்டும் என எதிர்பார்த்து இருக்கும் மனைவி,"இதுதான் மகிழ்ச்சியான வீடு" .."மகிழ்ச்சியான குடும்பம்".. இது தவறும் போது தான் இருவரும் மன உளைச்சல் கொண்டவராக வெறுப்பும், மனச்சோர்வும் கொண்டவர்களாக மாறி பல பிரச்சனைகளுக்கு அல்லது விவாகரத்துக்கு கூட காரணமாக அமைகின்றது. .

சுட்டெரிக்கும் வாழ்க்கை வெயிலில் கணவனுக்கான நிழல் மனைவியாவாள் மனைவிக்கான நிழல் கணவன் ஆவார். இந்த உளவியல் எந்தளவு தூரம் இன்று குடும்பங்களில் உயிர் வாழ்ந்து கொண்டிருக் கின்றது என்பதை நாங்கள் சிந்திக்க கடமைப்பட்டிருக்கிறோம். இதனைத் தான் அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது .." "உங்களில் இருந்து உங்களுக்கான ஜோடியை படைத்து, அதனிடம் நீங்கள் அமைதி காணுமாறு அமைத்திருப்பது அவனது அத்தாட்சிகளில் ஒன்றாகும். உங்களிடையே அன்பையும் இரக்கத்தையும் அவன் ஆக்கியுள்ளான்" (சூரா ரூம் 21)

நாம் இப்போது உளவளத் துணை மற்றும் காழி நீதிமன்றங்களுக்கு வந்த தம்பதிகளின் அமுங்கி இருக்கின்ற மர்மமான பக்கங்களின் சில துளிகளை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

ஒரு சகோதரி!. "எனது கணவர் அதிகமாக கோபப்படுகிறார். என்னை கைநீட்டி அடிக்கிறார். நான் இப்போது என்ன முடிவெடுப்பது என்பதில் திண்டாடிக் கொண்டிருக்கிறேன். ஒரு பக்கத்தில் எனக்கு குழந்தைகளும் இருக்கின்றனர். மறுபக்கத்தில், நான் அவரை அதிகம் நேசிக்கிறேன். அதே வேலை, பிரிந்து வாழலாம் என்றும் நினைக்கிறேன்"

புதிதாக திருமணம் முடித்த தம்பதியினர்!." எனக்கும் எனது மனைவிக்கும் இடையில் அண்மைக்காலமாக அதிகமான பிரச்சினைகள் ஏற்படுகின்றன .என்னுடைய திருமண வாழ்க்கை தோல்வி அடையுமோ என்று பயம் என்னை ஆட்கொண்டிருக்கிறது .என்றாலும் எனது மனைவியை எனக்கு பிரிய மனமில்லை. எனவே எனக்கு எனது திருமண வாழ்க்கையை பாதுகாக்க ஏதாவது வழி சொல்லுங்கள்"

ஒரு யுவதி !." திருமண விழாக்களுக்கு செல்லும்போதெல்லாம் நான் அதிகம் கவலைப்படுகிறேன் ..என்னை நினைத்து அதிகம் வேதனை அடைகிறேன்.. நான் இன்னும் திருமணம் முடிக்கவில்லை . இப்போது எனக்கு முப்பது வயதாகிறது. எனது குடும்பம் நண்பர்கள் இதைப் பற்றி பேசும் போது கவலையால் வெந்துருகுகிறேன். நான் வாழ்க்கையில் விரக்தி அடைந்து விட்டேன். நான் நம்பிக்கை இழந்து விட்டேன்!"

சில இளைஞர்களிடம் யுவதிகளிடம் ஏன் நீங்கள் திருமணம் முடிக்க வேண்டும் என்று கேட்டேன்!." அது ஒரு சுன்னா"

"பாவங்களிலிருந்து என்னை பாதுகாத்துக் கொள்ள"

"வயது வந்தால் திருமணம் முடிக்க வேண்டும்"

" வீட்டில் பெரும் தொந்தரவு திருமணம் முடி என்று "

"எனது நண்பர்கள் எல்லோரும் திருமணம் முடித்து விட்டார்கள் எனவே நானும் திருமணம் செய்து கொள்ள வேண்டும்"

" பெற்றோருக்கு சுமையாக இருக்கக் கூடாது"

"எனக்கு ஒரு ஆணின் நெருக்கம் தேவை"

"பெற்றோரின் சண்டையிலிருந்து சற்று ஓய்வெடுப்பதற்காக"

"ஏன் முடிக்க வேண்டும் என்று தெரியாது"

" வாழ்க்கையை அனுபவிப்பதற்கு"

"வெளிநாடு சென்று அங்கே தங்குவதற்கு"

ஒரு பெண்!." நான் திருமணம் ஆகி உள்ளேன் என்றாலும் ஒரு வகையான தனிமை , வெறுமையை உணர்கிறேன். எனக்கு பிள்ளைகளும் இருக்கிறார்கள். நான் தொழில் செய்கிறேன். பிரண்ட்ஸ் அனைவரும் இருக்கிறார்கள் .என்றாலும் இந்த தனிமை அல்லது வெறுமை உணர்வு என்னை வாட்டிக் கொண்டிருக்கின்றது.. இதற்கு என்ன செய்யலாம்"

ஒரு பெண்! "எனது கணவர் என்னோடு அன்பாக இருப்பார் நான் தேவையானவற்றை கேட்டால் வாங்கி தருவார். ஆனால் கணவருடைய தாய் எங்களோடு தான் இருக்கிறார். ஆனால் எனது கணவர் என்னை விடவும் எனது மாமிக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக நான் காண்கிறேன்.. உணர்கிறேன் . இதனால் எனக்கும் அவருக்கும் இடையில் தொடர்ந்து பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதற்கு என்ன செய்யலாம்.."

ஒரு பெண!. "எனது நிர்வாண படத்தை எனது கணவர் அவரது கைத்தொலைபேசியில் வைத்துக் கொண்டிருக்கிறார் .நான் அதனை பலமுறை அழிக்கச் சொல்லியும் கூட அவர் அதனை வைத்துக் கொண்டிருக்கிறார். நான் உங்கள் மீது கொண்ட அன்பின் காரணமாகவே இதனை வைத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் ஒன்றும் பயப்படத் தேவையில்லை என்றார். நான் இதற்கு என்ன செய்வது இஸ்லாம் என்ன சொல்கிறது"

நடுத்தர வயதை உடைய தம்பதியினர்!." எல்லா ஆணும் பெண்ணும் சண்டை பிடித்துக் கொள்வது இயல்பானது .நாங்கள் யாரும் மலக்குகள் அல்ல.ஆனால் நாங்கள் இருவரும் ஒரு போதும் எமது பிரச்சினைகள் பிள்ளைகளுக்கு தெரியும் வகையில் நடந்து கொண்டதே இல்லை .அதற்கு காரணம் எனது மனைவி புத்தி யோசனை யோடு வாழ்ந்ததினால் ஆகும் "

இவை இலங்கை முஸ்லிம் களின் குடும்ப வாழ்வில் காணப்படும் பிரச்சினைகளின் சில பக்கங்கள் மட்டுமே. என்றாலும் இவை தான் குடும்ப வாழ்வை அரித்துக் கொண்டிருக்கின்ற நோயாக மாறியுள்ளது. இது குறித்து துல்லியமான ஆய்வு ஒன்று எடுக்கப்படுமானால் பிரச்சினையின் பாரதூரத்தை இன்னும் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். எனவே இப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என சிந்திப்பது அடிப்படையானது. .இதுவே முஸ்லிம் சமூகத்தின் புத்தி ஜீவிகள், துறை சார்ந்தவர்கள் போன்றோரின் கவன ஈர்ப்பை பெற வேண்டும். அந்த வகையில் குடும்ப வாழ்வு இன்று பாரிய மீள் புணரமைப்பை வேண்டி நிற்கிறது .

(உள – சமூக பார்வை)

# இந்திய உயர் ஸ்தானிகர் வட மத்திய ஆளுனர் சந்திப்பு

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு (11) வடமத்திய மாகாண சபை வளாகத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.





இதன் போது உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மிகவும் நீண்ட வரலாற்றைக் கொண்டவை என்றும் மத மற்றும் கலாச்சார உறவுகள் அதன் ஸ்தாபக அடித்தளம் என்றும் கூறினார். இலங்கை இந்தியாவிற்கு மிகவும் முக்கியமான நாடு என்றும் இந்தியா இலங்கைக்கு சமமாக முக்கியமானது என்று தான் நம்புவதாக அவர் கூறினார்.

ஆளுநர் வசந்த ஜினதாசவிடம் மேலும் தனது கருத்தை தெரிவித்த உயர்ஸ்தானிகர் இந்தியா கடந்த காலங்களில் உயர் பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளதாகவும் சூரிய சக்தி துறையில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும் இந்த நிலைமை இலங்கைக்கும் முக்கியம் என்றும் எதிர் காலத்தில் சூரிய சக்தி மிகவும் சக்திவாய்ந்த எரிசக்தி மூலமாக இருக்கும் என்றும் கூறினார்.

விவசாயத்துறையில் முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும் அந்தத் துறையில் தேவையான ஆதரவை இலங்கைக்கு வழங்க முடியும் என்றும் அவர் கூறினார்.நெல் மற்றும் சோளம் உற்பத்தி போன்ற துறைகளை மேம்படுத்த உதவ முடியும் என்றும் கால்நடை வளர்ப்பில் குறிப்பாக பால் உற்பத்தியில் இந்தியா ஒரு முக்கிய இடத்தில் உள்ளது என்றும் வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மாவட்டத்தில் பால் உற்பத்தியை மேம்படுத்த உதவ முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். எதிர் காலத்தில் மக்களைப் பாதிக்காத அபிவிருத்தி திட்டங்களை இந்த காலகட்டத்தில் நேரடி மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தத் தயாராக இருப்பதாகவும் குறுகிய காலத்தில் மக்களுக்கு பலன்களை வழங்கும் வீட்டுத் திட்டத்தை செயல்படுத்த தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் நிலவும் போக்குவரத்து சிரமங்கள் மிக விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்றும் வீதிகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக் காட்டிய உயர் ஸ்தானிகர் விமான பணிகள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் அனுராதபுரம் மற்றும் ஹிங்குராங்கொடை விமான நிறுவனங்கள் மையமாகக் கொண்ட விமானங்களுக்கு இடையேயான பயணிகள் போக்குவரத்து துறையை விரிவுபடுத்த உதவத் தயாராக இருப்பதாகவும் உயர் ஸ்தானிகர் மேலும் தெரிவித்தார்.

இதன் போது வடமத்திய மாகாண பிரதம செயலாளர் ரஞ்சன ஜயசிங்க மற்றும் ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் ஆனந்த பிரேம்குமார ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விருதோடை யுனைடட் இளைஞர் கழக புதிய நிர்வாகத் தெரிவு




(எம் எச் எம் சியாஜ்)

விருதோடை யுனைடட் இளைஞர் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு (03) கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் புத்தளம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம்.பைசல், கிராம உத்தியோகத்தர் ஐ.எப் பர்வின், அபிவிருத்தி உத்தியோகத்தர் பரீஹா மற்றும் முந்தல் பிரதேச செயலக இளைஞர் அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகக் குழுவின் தலைவராக எம்.யூ நபீஸ், செயலாளராக எம். எம். ஏ. றாஸா, பொருளாளராக எச். எம். றுஸ்தீ மற்றும் ஏனைய அங்கத்தவர்கள் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# கடந்த ஆறு மாத காலப் பகுதியில்
## யானை- மனித மோதலில் 261 உயிரிழப்புகள்



(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

யானை - மனித மோதலில் இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் 261 உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு 198 யானைகள் இறந்துள்ளன.இதேவேளை யானை தாக்குதலுக்கு இலக்காகி 68 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிச் சூட்டு காயங்களினால் 34 யானைகளும், மின்சாரம் தாக்கி 35 யானைகளும், ஹக்க பட்டாஸ் வெடிபொருட்களினால் 18 யானைகளும், ரயில் மோதி 12 யானைகளும் உயிரிழந்துள்ளன. ஏனைய உயிரிழப்புகள் இயற்கையான காரணங்கள் அல்லது அடையாளம் காணப்படாத காரணங்கள் ஏற்பட்டுள்ளன.பெரும்பாலான இளம் யானைகள் உயிரிழந்துள்ளன.

2024 ஆம் ஆண்டில் இரு தரப்பிலும் குறிப்பிடத்தக்களவு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. கடந்த ஆண்டு மொத்தம் 380 யானைகளும் 154 பொது மக்களும் உயிரிழந்துள்ளதாக பதிவாகியுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அ. இ. ஜ. உலமா புத்தளம் நகரக்கிளையினால் கர்ப்பிணிப் பெண்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு



(அ.இ.ஜ.உ புத்தளம் நகரக்கிளை)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக்கிளையின் ஏற்பாட்டில் புத்தளம் சுகாதார திணைக்களம் புத்தளம் மாநகர சபை, எப்.பி.ஏ.நிறுவனம் மற்றும் பாண்டா பேபி நிறுவனம் இணைந்து 120 கர்ப்பிணிப் பெண்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு (07)புத்தளம் நகர மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந் நிகழ்வு அ.இ.ஜ. உ. புத்தளம் நகரக்கிளையின் செயலாளர் அஷ்ஷேக் அஸீம் ரஹ்மானி கிராஅத்தை தொடர்ந்து நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்ட தோடு அதன் தலைவர் அஷ்ஷேக் ஜிப்னாஸ் மிஸ்பாஹியின் தலைமையுரையும் நிகழ்த்தப்பட்டது. மேலும் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் நப்பா மூலமாக 120 கர்ப்பிணிப் பெண்களுக்கான வழிகாட்டல் வழங்கப்பட்டதோடு ஒவ்வொரு கர்ப்பணிப்பெண்களுக்கான 2000 ரூபா பெருமதியான (கர்ப்ப காலத்தில் தேவையான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

# இலங்கையின் அஞ்சல் திணைக்களத்தில் முதலாவது முஸ்லிம் பெண் உள்ளக கணக்காய்வு உதவி அத்தியட்சகராக பாத்திமா ஹஸ்னா நியமனம்..!

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)





அஞ்சல் திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வு உதவி அத்தியட்சகராக கே. பாத்திமா ஹஸ்னா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தின் மூலம் இலங்கை அஞ்சல் திணைக்களத்தில் இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். இலங்கையின் அஞ்சல் திணைக்கள வரலாற்றில் இதற்கு முன்னர் இந்தப் பதவிக்கு முஸ்லிம் பெண்ணொருவர் நியமனம் பெற்றிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த பாத்திமா ஹஸ்னா, அஞ்சல் திணைக்கள உள்ளக கணக்காய்வு உதவி அத்தியட்சகராக பதவி உயர்வு வழங்கப்படுவதற்கு முன்னர் இலங்கை அஞ்சல் பயிற்சி நிறுவகத்தில் அஞ்சல் பயிற்சிப் போதனாசிரியராகப் பணியாற்றினார்.

அஞ்சல் திணைக்களத்தினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட உதவி அஞ்சல் அத்தியட்சகர்களுக்கான பரீட்சையில் அஞ்சல் திணைக்களத்தில் அதிகாரிகளாகப் பணியாற்றிய 39 பேர் தேர்ச்சிபெற்றிருந்தனர்.

அவ்வாறு சித்தியடைந்தவர்களில் 12 பேர் அஞ்சல் திணைக்கள உள்ளக கணக்காய்வு உதவி அத்தியட்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் அறிவித்தலின் பிரகாரம் இந்த பதவி உயர்வு நியமனம் கடந்த 03.07.2025 அன்றைய தினத்திலிருந்து அமுலாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.






நாச்சியாதீவு பர்வீன்



# உயிர்த்தெழுந்த நாட்கள்…

**கடந்த வார தொடர்ச்சி…**

**வ.ஐ.ச. ஜெயபாலன்**

பரிதாபமாக எம்முன் நிற்கும்
சிங்களத்தோழர் சிறுகுழுவே கலங்கிடல் வேண்டாம்.
உங்கள் நட்பின் செம்மைச் செழிப்பில்
சந்தேகம் நான் கொண்டிடவில்லை!
தற்போ துமது வல்லமை தன்னில்
நம்பிக்கை கொள்ள ஞாயமும் இல்லை.
எம்முயிர் வாழ்க்கை சீர்குலைந்திட்ட
இந்தநாளின் பயங்கரத்துக்கு
ஏதுமோர் சவாலாய் இல்லையே நீங்கள்!
சென்று வருக,
எனது உயிர்தப்பும் மார்க்கத்தில்
நின்று கதைக்க ஏதுபொழுது? என்றாலும்,
பின்னொருகால் சந்திப்போம்
தத்துவங்கள் பேச…

* * *

தமிழர் உடைமையில்
கொள்ளை போனதும் எரிந்ததும் தவிர்த்து
எஞ்சிய நிலத்தில் எரிந்த சொத்துக்கள்
அரசுடைமை எனும் அறிக்கை கிடந்தது.
இப்படியாக, உயிர் பிழைத்தவர்கள்
பின்புற மண்ணையும் தட்டியபடிக்கு
எழுந்தோம்,
வெறுங்கைகளோடு –

உடைந்த கப்பலை விட்டு
அகன்ற
றொபின்சன்
குரூசோவைப்போல!
குலைந்த கூட்டை விட்டு
அகன்ற
காட்டுப் பறவையைப்
போல.
நாம் வாழவே எழுந்தோம்.
சாவை உதைத்து,
மண்ணிலெம் காலை ஆழப்
பதித்து
மரண தேவதை இயற்கையாய் வந்து
வருக என்னும் இறுதிக் கணம்வரை,
மூக்கும் முழியுமாய்
வாழவே எழுந்தோம்!

நன்றி–
(1983 / அலை-23)

# பேருவளை யூத் லீக் தொடரில் பார்பரீன் அணி சாம்பியன்




**(பீ.எம்.முக்தார்)**

ஸூஹைர் ஹஜ் ட்ரவல்ஸ் இன் அனுசரனையுடன் பேருவளை உதைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட Youth league championship 2025 உதைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி (05) தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது,

பேருவளை பகுதியை சேர்ந்த 16 உதைப்பந்தாட்ட அணிகள் பங்குப்பர்ரியமை குறிப்பிடத்தக்கது

பேருவலை பாபரீன் உதைப்பந்தாட்ட அணியும்,தர்காநகர் லிவர்பூல் உதைப்பந்தாட்ட அணியும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகின.

இறுதிப்போட்டியில் இரு அணிகலும் 1-1 என்ற கோலை பெற்றுக்கொண்டபின்னர் பின்னர் பெனால்டி முறையில் லிவர்ப்பூல் அணி 3 கோல்கலையும் , பார்ப்பரீன் அணி 5 கோல்கலையும் பெற்றதோடு பார்பரீன் அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

பரிசலிப்பு விழா சங்கத்தலைவர் றிஸ்வான் ஹாஜியார் தலைமையில் நடைப்பெற்றதோடு, களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பேருவளை அபிவிருத்தி குழு தலைவருமான சந்திம ஹெட்டியாராச்சி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.ஸூ ஹைர் ஹஜ் ட்றவல்ஸ் உரிமையாளர் ஏ.பீ.எம்.ஸூஹைர் ஹாஜியார், முன்னாள் எம். பீ.அஸ்லம் ஹாஜியிர், டாக்டர் ரூமி ஹாஷிம், முன்னாள் அதிபர் எம். இசட். எம். நயீம்,பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். கே.ரத்ன ஸிங்கம்,அதிபர் எம்.இசட்.எம்.வசீர், களுத்துறை மாநகர சபை உறுப்பிணர் அன்வர் சர்தார்,உதைப்பந்திட்ட சங்க முன்னாள் தலைவர் பதீ ஹாஜியார்,டிபை உவைல உரிமையாளர் இஜிலான் யூஸூப் ஹாஜியார், முன்னாள் பிரதேச சபை உரிப்பினர் ஹசீப் மரிக்கார் மற்றும் ஜஸூக் அஹமட் உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

## மனநலமும் ஆலோசனையும் 82

# தாயின் புத்திமதி

தாயின் மொழி, அவள் வெளிப்படுத்தும் வார்த்தைகள், வார்த்தைகளின் சத்தம், முகபாவனை அனைத்தும் அவளது பிள்ளைகளை வடிவமைக்கும் கருவிகள்.

பிள்ளைகள் தங்களது தாய் தந்தையின், பராமரிப்பாளர்களின் ஆன்மாவை பிரதிபலிக்கின்றனர். குறிப்பாக, தாயின் வார்த்தைகளை, அவள் தரும் புத்திமதிகளை ஆழமாக உறிஞ்சுகின்றனர்.

தாயின் வார்த்தைகள் வெறும் வார்த்தைகள் அல்ல. அவை வரைபடங்கள், அதிர்வெண்கள், ஒரு பிள்ளையின் இதயத்தில் செதுக்கிய ஆரம்ப சட்டங்கள்.

இங்கு ஒரு வெளிப்படையான உண்மை இருக்கிறது:

ஒரு தாய் தனது பிள்ளைகளிடம் அவதானமாக, பொறுமையாக, அன்பாக ஆலோசனை அல்லது புத்திமதி கூறுகிறாள் என்றால், அழகான மொழி பேசி தொடர்பு கொள்கிறாள் என்றாள் அந்த பிள்ளைகள் ஆர்வமாக அவளுடன் இணைந்து கொள்ள வாய்ப்பு அதிகம்.

அவளது குரலும் பேசும் சொற்களும் அழகும் உறுதியும் பெற்றதாக இருந்தால் அவை பிள்ளைகளுக்குள் ஒரு மென்மையான காற்றாக இருந்து, அழகான வாழ்க்கைக்கு வழிகாட்டும். மனமான மொழி பேசும் மனிதர்களாக மாற்றும்.

ஆனால்...

தாயின் ஆலோசனை எப்போதும் கடுமையாகவும், சத்தமாகவும், விமர்சனமாகவும், கட்டாயமாகவும் இருக்குமானால், அதே நேரம் அவளது முகபாவனைகளில் பயமும் குற்றச்சாட்டும் நிறைந்திருந்தால் அந்த புத்தி சொல்லும் முறை பிள்ளைகளின் இயல்பான எதிர்வினையாக மாறும், குறிப்பாக அழுத்தம் அதிகமாகி பல பின்னடைவுகளுக்கு காரணமாக ஆகிவிடும். ஒரு காலத்தில் தாயுடனே எதிர்த்து பேசும் நிலையை உருவாக்கும்.

காலம் போகப் போக தாயின் கடினமான மொழியை உள்ளே எடுத்து, தங்களை விமர்சிக்கிறவர்களாக அல்லது உளவியல் பதற்றத்தில் சிக்கிக்கொண்டவர்களாக ஆக முடியும்.

அல்லது அதை வெளியே காட்டி, தாயை ஒத்ததாக மற்றவரிடம் கடுமையாக நடந்து கொள்கின்ற வர்களாக மாறிவிடவும் அதிக வாய்ப்புண்டு.

தாயின் சத்தம் மட்டுமல்ல, அவளது முகபாவனையும் குரலும், பிள்ளையின் உள்ளக்குரலாக மாறலாம்.

இதமான மொழி பேசி, அழகாக வழிகாட்டும் தாய், ஒரு ஒளிகாட்டும் கோபுரமாகவும் பாதுகாப்பான துறைமுகமுமாகவும் இருக்கிறாள்.

அவள் எந்த இடத்திலும் வலிமையானவளாக இருப்பாள். கடுமையானவளாக இருக்க மாட்டாள். அவள் ஒழுக்கம் புகட்டுபவள். அதட்டல் காட்டமாட்டாள்.

அவள் உறுதியாக பேசுவாள். ஆனால் பதட்டம் அடைய மாட்டாள்.

இன்று ஒரு தாய் பேசும் பேச்சானது நாளை அவளது மகன்ஃமகன் கண்ணாடியில் தன்னைப் பார்த்து பேசும் விதமாக மாறும்.

அவர்களின் எதிர்கால உறவுகளின் மொழியாக மாறும்.

எனவே ஒவ்வொரு தாயும் அறிந்திருக்க வேண்டியது...

உங்கள் மொழியும் ஆலோசனையும் ஒரு விதை.

அதைக் கருணையால் விதையுங்கள்.

பொறுமையால் நீரூட்டுங்கள்.

அப்போது நீங்கள் பயிரிடப்போகிற பிள்ளைகள், பயத்தால் வறண்ட மருதநிலங்களாக அல்ல,

கருணையால் பசுமை கொண்ட விளைநிலங்களாக விளங்குவார்கள்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித் பிரேமதாச அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

சுஜஊளு ளுசை டுயபெய ஐனெரளவசல னுயைடழபரந ை ஊழடழஅடிழ நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதாரம் தொடர்பிலான தனது தொலைநோக்குப் பார்வையை எதிர்க்கட்சித் தலைவர் இங்கு முன்வைத்தார்.

a national circular built environment framework, affordable housing for the middle class, smart urban planning, revitalizing the construction secto, and green public procurement ஆகிய இந்த ஐந்து அம்சங்களை நோக்கி நாம் நகர வேண்டியதன் முன்னுரிமை முக்கியத்துவத்தை அவர் இங்கு எடுத்துக்காட்டினார்.

கொள்கைகள் மற்றும் பேச்சுக்களை விட செயலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர், பேச்சுக்களை விட உண்மையான செயலாக்கத்துக்கு அழைப்பு விடுத்தார். அவ்வாறே வரையறுத்த அரச நிதி இருப்பை அங்கீகரித்து கொண்டு, நகர்ப்புற இடம் சீர்திருத்தம் மற்றும் முதலீட்டாளர் வசதி போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க வேண்டும் என்றும் இங்கு அழைப்பு விடுத்தார்.

நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஆதரிக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்த அவர், ஊழலைக் கட்டுப்படுத்த முழுமையான டிஜிட்டல் மயமாக்கலுக்கும் அழைப்பு விடுத்தார்.

அவசர சீர்திருத்தங்கள் இல்லாவிட்டால் 2028 ஆம் ஆண்டில் ஏற்படப் போகும் பொருளாதார நெருக்கடி குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு எச்சரிக்கை விடுத்தார். குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நியாயமானதொரு, ஐஆகு இணக்கப்பாட்டுக் கொள்கையை எட்டிக்கொள்ள தான் முன்நிற்பேன் என்றும் அவர் இங்கு தெரிவித்தார்.

## ஹஜ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு (ஹிஜ்ரி 1447) ஹஜ் கடமையினை நிறைவேறறுவதற்கு உத்தேசித்துள்ளவர் களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

இதனடிப்படையில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள இணையத்தளத்தின் ஊடாக Online மூலம் http://muslimaffairs. Info/ hajjapplications 26/ create) தங்களது பதிவினை 2025.07.03 திகதியிலிருந்து மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இதுவரை திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து பதிவுகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறியத் தருகின்றோம்.

புதிதாக பதிவினை மேற்கொள்பவர்கள் 2026 ஆம் ஆண்டு தமது ஹஜ் பயணத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பதிவுக் கட்டணமாக மீளளிக்கப்படாத தொகையான 5000.00 ரூபாவினை MRCA Hajj Account No 2327593 Bank of Ceylon, Hyde Park Branch என்ற வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு பற்றுச் சீட்டினை திணைக்களத்திற்குச் சமர்ப்பித்து தங்களது ஹஜ் பயணத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படு கின்றீர்கள்.

குறிப்பாக பதிவுக் கட்டணமாக மீளளிக்கப்படாத 5000.00 ரூபாவினை மேலே குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கணக்கிலக்கம் தவிர்ந்த ஏனைய வங்கிக் கணக்கிலக்கங்களுக்கு பணம் வைப்பிலிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

2025ம் ஆண்டு ஹஜ் பயணத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பதிவுக்கட்டணமாக ரூபா 5000.00 இனை செலுத்தி பின்னர் ஹஜ் பயணத்தினை மேற்கொள்ள முடியாமல் போனவர்கள் 2026 ஆம் வருடம் ஹஜ் பயணத்தினை மேற்கொள்ள உத்தேசித்திருப்பின் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள இணையத்தளத்தின் பதிவினை மேற்கொள்ளுமாறும், பதிவுக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறோம். இவர்களுக்கு 2026 வருடம் ஹஜ் பயணத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதனை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிபப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் தெரிவிக்கின்றார்.

மேலதிக விபரங்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 0112667901 தொலைபேசி இலக்கத்தினூ டாக ஹஜ் பிரிவை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.




பயாஸா பாஸில்

# திட்டமிடுதலில் பெண்கள்

இன்றைய சமூகத்தில் பெண்களின் பங்கு முன்னேறிய வழியில் பயணிக்கின்றது. கல்வி, தொழில், தொழில்முனைவோர் முயற்சி, அரசியல், மற்றும் சமூக சேவை போன்ற துறைகளில் முன்னோடிகளாக பெண்கள் திகழ்கின்றனர். இந்த வளர்ச்சியின் பின்னணி ஒன்றை ஆராய்ந்தால், அதில் முக்கிய இடம் பெறுவது ”வாழ்க்கை திட்டமிடல்” என்பதே.

பெண்கள் இயற்கையாகவே பொறுப்பும், பொறுமையும் மிக்கவர்களாக உள்ளனர். குடும்பத்தின் நலனுக்காக முன்னேற் பாடுகளைச் செய்யும் திறன் அவர்களுக்கு உடையது. ஒரு தாயாக, மனைவியாக, மகளாக, வேலைக்குச் செல்லும் பணியாளராக செயல்படும் பெண்கள், ஒவ்வொரு செயலிலும் திட்டமிட்டு வாழ்க்கையை செயல்படுகின்றனர்.

வாழ்க்கையை திட்டமிடுதல் என்பது.,

- நேரத்தை சரியாக பகிர்ந்து கொள்வது
- இலக்குகளை அமைத்து செயல்படுவது
- நிதியை சீராகக் கையாளுவது
- எதிர் காலத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது

என பல அம்சங்களை உள்ளடக்கியது. இதில் பெண்கள் பெரிதும் கவனம் செலுத்துகின்றனர்.

உதாரணமாக, ஒரு வேலைக்குச் செல்லும் தாய், காலையிலேயே குழந்தைகளின் உணவு, பாடசாலை, வேலை நேரம், குடும்ப தேவைகள் ஆகியவற்றைத் திட்டமிட்டு செயலில் ஈடுபடுகிறாள். இது தான் வாழ்க்கை திட்டமிடலின் சிறந்த உதாரணமாகும்.

இன்றைய பெண்கள், சுயதிறன் கொண்டவர்கள். அவர்கள் தனிப்பட்ட இலக்குகளை அமைத்து, கல்வியில் சிறந்து விளங்கி, தொழிலில் முன்னேறி, குடும்பத்தையும் சமநிலையுடன் நடத்துகிறார்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் திட்டமிடல் மூலம், வெற்றி பாதையில் பயணிக்கிறார்கள்.



பெண்கள் வாழ்க்கையை திட்டமிடுவதில் முன்னோடிகளாக உள்ளனர். அவர்களின் திட்டமிடும் திறன், குடும்ப வளர்ச்சிக்கும், சமூக மேம்பாடுக்கும் ஆதாரமாக அமைகிறது. அவர்களுக்கு உரிய இடம், மதிப்பு, மற்றும் ஊக்கம் அளிக்கப்பட வேண்டும் என்பதையே நாம் உணர வேண்டும். இப்படிப்பட்ட திட்டமிடும் பெண்களே ஒரு சிறந்த சமூகத்தின் தூண்கள் ஆகும்.



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)



# அமைதிப் பணிகள் தோல்வி
# கொதி நிலையில்
# மத்திய கிழக்கு

போரை முடிவுக்கு கொண்டு வர அனைத்து தரப்பினருடனும் வேலை செய்வோம்", என ட்ருத் சோசியல் சமூக ஊடகத்தில் வெளியிட்ட ஒரு பதிவில் டிரம்ப் தெரிவித்தார்.

"அமைதியை கொண்டு வர மிகக் கடுமையாக பணியாற்றிய கத்தார் மற்றும் எகிப்தியர்கள் இறுதி முன்மொழிவை தருவார்கள். ஹமாஸ் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகிறேன், ஏனென்றால் இது இதைவிட சிறந்ததாக மாறாது, இதைவிட மோசமானதாகத்தான் மாறும்," என டிரம்ப் தனது பதிவில் கூறியிருக்கிறார்.

இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாக இஸ்ரேல் உறுதி செய்யவில்லை, அதே நேரம் ஹமாஸிடமிருந்தும் எந்த உடனடியான கருத்தும் இல்லை.

ஆனால் தற்போது அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கொடுத்துள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள முன்வந்துள்ளது ஒரு திருப்பு முனையாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் கிடியோன் சார் 'பணயக் கைதிகளை மீட்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதற்கு' அரசாங்கத்தில் பெரும்பான்மை உள்ளது மற்றும் இந்த வாய்ப்பு தவறவிடப்படக் கூடாது என எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை அடுத்த வாரம் சந்திக்கவிருக்கும் நிலையில் டிரம்பின் அறிவிப்பு வெளியாகியுள்ளது. அந்த சந்திப்பில் "மிகவும் உறுதியாக நடந்துகொள்வேன்" என டிரம்ப் தெரிவித்திருந்தார்.

காஸாவில் போரை முடிவுக்கு கொண்டு வர நெத்தன்யாகு விரும்புகிறார் என தாம் நம்புவதாக டிரம்ப் செவ்வாய்கிழமை தெரிவித்தார்.

"போரை நிறுத்த அவர் விரும்புகிறார் என என்னால் சொல்ல முடியும். அடுத்த வாரம் ஒரு ஒப்பந்தம் இருக்கும் என நான் நினைக்கிறேன், " என டிரம்ப் மேலும் கூறினார்.

இஸ்ரேலின் மூலோபாய விவகாரங்கள் அமைச்சர் ரான் டெர்மர் மத்திய கிழக்கிற்கான அமெரிக்க சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப், அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மார்கோ ரூபியோ மற்றும் துணை அதிபர் ஜேடி வான்ஸ் ஆகியோரை வாஷிங்டனில் சந்திக்கவிருக்கிறார்.

ஈரான் சில மாதங்களில் அணுகுண்டு தயாரிப்பதற்கான யுரேனியம் செறிவூட்டலை தொடங்கும் திறனைக் கொண்டுள்ளது என ஐ.நா அணுசக்தி கண்காணிப்பகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அணுசக்தி முகமையின் (IV,V) தலைவர் ரஃபேல் க்ரோஸி கடந்த வாரம் மூன்று ஈரானிய நிலைகள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதே தவிர முழுமையான பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை எனத் தெரிவித்தார். இது ஈரானின் அணுசக்தி மையங்கள் "முழுமையாக அழிக்கப்பட்டன" என்கிற டிரம்ப்பின் கூற்றுக்கு முரணாக உள்ளது.

"அனைத்தும் மறைந்துவிட்டன என்றும் அங்கு எதுவுமே இல்லை என யாருமே வெளிப்படையாக கூற முடியாது" என சனிக்கிழமையன்று க்ரோஸி தெரிவித்தார்.

ஈரான் அணு ஆயுத தயாரிப்பை நெருங்கிவிட்டது எனக்கூறி கடந்த ஜூன் 13ம் தேதி அந்நாட்டின் அணுசக்தி மற்றும் ராணுவ நிலைகளை இஸ்ரேல் தாக்கியது. அதன் பின்னர் இந்த மோதலில் இணைந்த அமெரிக்கா ஃபோர்டோ, நதான்ஸ் மற்றும் இஸ்ஃபஷான் ஆகிய ஈரானின் அணுசக்தி நிலைகள் மீது குண்டுகளை வீசியது.

அப்போதிலிருந்து பாதிப்பின் உண்மையான அளவு என்னவென்பது பற்றி தெளிவு இல்லை. "இன்னும் சில மாதங்களில் ஈரான் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை தயாரிப்பதை துவங்கக் கூடும்" என குரோஸி கூறியிருப்பது ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே இந்த பிரச்சினை மீண்டும் சூடு பிடிக்கும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அணுசக்தி முகமையின் இயக்குநர் ஜெனரல் ரஃபேல் க்ரோஸி ஈரானுக்கு வருவதற்கான சாத்தியக் கூற்றை நம்பிக்கையின்மை, பதற்றத்தை காரணம் காட்டி ஈரானின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

குறிப்பிட்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் வரை IV,V வுடன் ஒத்துழைப்பை நிறுத்திக் கொள்வதற்காக ஈரான் அரசு ஒரு புதிய சட்டத்தை அமல்படுத்த இருப்பதாக அரக்சி தெளிவு படுத்தினார்.

மறுபுறம், ஐ ஏ இ ஏ தலைவருக்கு எதிராக ஈரானில் இருக்கும் கோபத்தை பார்த்த பின்னர் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ அதை கண்டித்ததுடன், ஐஏஇஏவின் பணிகளை வெளிப்படையாக ஆதரித்துள்ளார்.

ஐ ஏ இ ஏஸவுக்கு எதிரான ஈரானின் கடுமையான நிலைப்பாடு, அதன் அணுசக்தி மையங்கள் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நடத்திய தாக்குதல்களுக்கு எதிர்வினையாக பார்க்கப்படுகிறது. இது அணுசக்தி திட்டங்களை கண்காணிப்பதை மேலும் சிக்கலானதாக மாற்றக்கூடும்.

ஆனால்,"இன்றைய சூழலில் ரஃபேல் க்ரோஸியை அழைக்கும் எண்ணம் துளியும் இல்லை," என ஈரானின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி அரசு தொலைக்காட்சி சேனல் ஐஆர்ஐஎன்என்னுக்கு ஜூன் 26ஆம் தேதி அளித்த பேட்டியில் கூறியிருந்தார்.

"அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஈரானின் அணுசக்தி மையங்கள் மீது நடத்திய தாக்குதலால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்ய அவர் விரும்புகிறார்," என அவர் தெரிவித்தார்.

ஐஏஇஏ தலைவரின் அண்மைக் கால நடவடிக்கைகள், குறிப்பாக ஈரானுக்கு எதிராக ஐஏஇஏ ஆளுநர்கள் குழு தீர்மானம் நிறைவேற்ற காரணமான அறிக்கை போன்றவையே தற்போதைய முட்டுக்கட்டைக்கு முக்கியமான காரணம் என அரக்சி குற்றம் சாட்டினார்.

இதற்கிடையில் ஈரான் அதி உயர் தலைவர் ஆயதுல்லா அலி காமனெயி, ஜூன் 26ம் தேதியன்று வெளியிட்ட பதிவு செய்யப்பட்ட காணொளியில், ஈரானின் அணுசக்தி நிலைகளை தாக்கியதன் மூலம் அமெரிக்கா 'எதையுமே சாதிக்கவில்லை' எனக் கூறியிருந்தார்.

நடந்தவற்றை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மிகைப்படுத்தியுள்ளார். அவர் பேசுவதை கேட்பவர்களுக்கு அவர் உண்மையை திரிக்கிறார் என்பது புரியும்" என்று தெரிவித்தார்.

காமனெயியின் கருத்துக்கு டிரம்ப் எதிர்வினையாற்றியுள்ளார். அவர் தனது ட்ஷரூத் சோஷியல் பதிவில், "ஆயதுல்லா அலி காமனெயி, இஸ்ரேல் உடனான போரை வென்றுவிட்டேன் என முட்டாள் தனமாக ஏன் சொல்கிறார்? இந்தக் கூற்று பொய் என அவருக்குத் தெரியும். அவர் பொய் சொல்லக் கூடாது." என்று தெரிவித்திருந்தார்.

அதன் பிறகு பேசிய ஈரான் வெளியுறவு அமைச்சர் சையது அப்பாஸ் அராக்சி ஈரானுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டுமென்றால், அதிபர் டிரம்ப் ஈரானின் அதி உயர் தலைவர் காமனெயி பற்றி அவமதிக்கும் மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத தொனியில் பேசுவதை கைவிட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

ஒட்டுமொத்த உலகமும் ஈரான் மற்றும் அமெரிக்காவின் கருத்துகளை கவனிப்புடன் பார்த்து வருகிறது. காமனெயியின் வீடியோ பதிவு பற்றிய செய்திகள் அனைத்து ஊடகங்களிலும் பரவலாக வெளியிடப்பட்டுள்ளன, அதிலும் குறிப்பாக அரபு நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சிகள் அந்த செய்தியை அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக செய்திகள் வெளியாகியுள்ளன என்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

இஸ்ரேல் உளவு அமைப்புகளுடன் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படும் பலரை ஈரான் கைது செய்து தூக்கிலிட்டுள்ளது. முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு இஸ்ரேல் உளவாளிகள் ஈரானின் உளவு அமைப்புகளுக்குள் ஊடுருவி இருப்பதாக ஈரான் அதிகாரிகள் சொல்கின்றனர்.

ஈரானின் உயர் பொறுப்பிலிருந்த தலைவர்கள் கொல்லப்பட்ட முறைக்கு இஸ்ரேல் ராணுவத்திற்கு உளவாளிகள் கொடுத்த தகவல்கள் காரணமாக இருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

அண்மையில் நடைபெற்ற மோதலில் ஐசுபுஊ எனப்படும் ஈரானின் இஸ்லாமிய புரட்சி பாதுகாப்பு படையைச் சேர்ந்த பல மூத்த தளபதிகளையும், அணு விஞ்ஞானிகளையும் இஸ்ரேல் கொன்றது. இந்தக் கொலைகளுக்கு ஈரானுக்குள் பணியாற்றும் இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டின் உளவாளிகளை ஈரான் பொறுப்பாக்குகிறது.ஈரானின் தலைவர்கள் மற்றும் அணு விஞ்ஞானிகள் மீதான தாக்குதலின் அளவும், துல்லியமும் ஈரான் அதிகாரிகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

போரின் போது, இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாக குற்றம்சாட்டப்பட்ட ஆறு பேரை ஈரான் அதிகாரிகள் தூக்கிலிட்டனர். இஸ்ரேலுக்கு உளவு பார்த்த வகையில் 700 க்கு மேற்பட்ட உளவாளிகள் என்று சந்தேகிக்கப்படுகிற பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதை விட மிகுந்த ஆச்சரியம் என்னவென்றால் இஸ்ரேல் நாட்டில் தயாரிக்கப்பட்ட அதன் தொழில்நுட்ப அடிப்படையில் ஆன 10,000 க்கு மேற்பட்ட ட்ரோன்கள் ஈரானில் பிடிக்கப்பட்டுள்ளது மிகப் பெரிய அளவில் ஆன அதிர்ச்சியை அந்த நாட்டின் மக்களுக்கு இடையே ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரண்டு நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பிளவுகள் தற்போது மத்திய கிழக்கு முழுவதும் பரவி வருவதை அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கவனிக்க தவறவில்லை என்பதே யதார்த்தமான நிலையாகும். ஏனெனில் அமெரிக்கா தங்களின் செல்லப் பிள்ளையாக வளர்க்கும் இஸ்ரேல் ஒரு கட்டத்தில் சிவப்பு கோட்டை அதாவது தற்போது மீறி வருவதைக் காண கூடியதாக இருக்கிறது. இஸ்ரேல் எந்தவொரு சட்டத்தின் கீழ் தங்களை இணைத்துக் கொண்டு செயல்பட தயாராக இல்லை என்பதே உண்மை.

மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது அமைதி திரும்பியது என்று யாரும் இனி கருதி விடக்கூடாது என்பதற்காக அறிகுறிகள் தற்போது தெளிவாக தெரியத் துவங்கி விட்டதாக நாம் புரிந்து கொள்ள முடிகிறது. கடந்த சில நாட்களாக அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பொது தளத்தில் காசா போரை முடிவுக்குக் கொண்டு வர பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது.

இறுதியில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கொடுத்துள்ள ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள ஹமாஸ் இயக்கம் முன்வந்துள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.ஆனால் அதே சமயம் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள முன்வராத சூழலில் அடுத்த கட்ட போருக்கு அவர் தயாராகி வருவதாக சர்வதேச போரியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

இதற்கிடையில் ஈரான் நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உருவான பொது கருத்து என்னவென்றால் மீண்டும் இஸ்ரேலிய நாட்டை தாக்கி அழிக்கும் வரை ஓய்ய மாட்டோம் என்று மிகுந்த ஆரவாரமான நிலையில் முடிவுகள் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.அதே சூழல் தான் இஸ்ரேலிய நாட்டில் காணப்படுவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஒரு வேளை அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேலிய பிரதம அமைச்சர் பெஞ்சமின் நிதான்யாகுவின் சந்திப்பிற்கு பிறகு போர் நடைபெற்றால் அது உக்கிரமான ஒரு நிலையை நாம் அனைவரும் அறிந்து கொள்ள அதிகம் நேரம் தேவைப்படாது என்பதே உண்மையாகும்.

பெஞ்சமின் நிதான்யாகு கடைசி வரைக்கும் போர் செய்து எல்லா வழக்குகளில் இருந்தும் தப்பித்து கொள்ள முயற்சி செய்து வரும் நிலையில் அவரைப் பொருத்தவரை போர் நிறுத்தம் என்பது தற்கொலைக்கு ஒப்பானது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஏனெனில் அவரை சுற்றி வரும் வழக்குகள் மூலம் அவர் தண்டிக்கப்படலாம் என்று அவர் உறுதியாக நம்புகிறார். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு வின் மீது சர்வதேச மற்றும் உள் நாட்டிலும் மிகவும் அதிகமாக ஆதாரங்கள் கொண்ட வழக்குகள் தீர்ப்பை நோக்கி விரைந்து கொண்டு இருக்கும் நிலையில் தான் உறுதியாக சிக்கி கொள்வோம் என்று அவர் உறுதியாக நம்பும் நிலையில் இந்த போர் முடிவு இல்லாமல் தொடரும் என்பது மிகவும் கவலை தரும் செய்தி என்பதே நிதர்சனமான நிலையாகும்..

மத்திய கிழக்கு நாடுகள் முழுமையாக தற்போது கொதி நிலை காணப்படுகிறது. ஈரான் வலிமையான ராணுவம் கட்டமைப்பை கொண்ட தேசமாக வளர்ச்சி பெறுவது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனைத் துடைத்து எரிய வேண்டும் என்று அவர்களின் தீவிர யுக்தி மற்றும் முயற்சிகளை முறியடிக்க ஈரான் தனித்து நின்று களமாடி வரும் நிலையில் விரைவில் அடுத்த கட்ட நகர்வுகள் போராக உருப்பெற்றும் என்பது தான் தவிர்க்க முடியாத ஒன்றாக தற்போது சூழல் மாறியுள்ளது என்பதே யதார்த்தமான நிலையாகும்..

# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 30 வருட நிறைவு நிகழ்வு





(இஸட்.ஏ.ஏ.றஹ்மான்)

இலங்கையில் வறுமை ஒழிப்புத் திட்டத்தை அமுல்படுத்தும் வகையில் 1995ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சமுர்த்தி அதிகார சபையின் (சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்) 30வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாடு பூராகவும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினால் கடந்த 08ம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட மரநடுகை மற்றும் மாணவர்களுக்கு வீதிப் போக்கு வரத்து ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பான பயிற்சி வகுப்பும் சம்மாந்துறை மத்திய கல்லூரியில் பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் தலைமையில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம் ஹூசைன் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருமான எஸ்.ஜெகராஜன் கலந்து சிறப்பித்தார். மேலும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் அதிபர் எம்.டி.எம்.ஜனூபர், ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மலேஷிய சர்வதேச அபகஸ் போட்டியில் பந்தாவ ஹமிக்கு இரண்டாம் மூன்றாம் இடங்கள்




பந்தாவ, பொல்கஹவலயைச் சேர்ந்த மாணவன் ஆ.சு. ஹமி மலேசியாவில் நடை பெற்ற Genting intle abacus and Mental Arithmatic ( எண்கணிதம்) போட்டியில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்ளை பெற்று தாய் நாட்டுக்கு பெருமை தேடி தந்துள்ளார்.

இப்போட்டியில் வெற்றி பெற காரண கர்த்தாவாக இருந்த இம் மாணவனின் ஆசிரியை சரீனா அன்வரின் பங்களிப்பு மகத்தானகும்.

இம்மாணவன் பந்தாவயை சேர்ந்த S. P. M. ரினாஸ், பாத்திமா ருஷ்தா ஆகியோரின் புதல்வருமாவர்.

# சர்ஜூன் ஜமால்தீனின் 3 நூல்கள் வெளியீட்டு விழா- ரிஷாட் எம்.பி பங்கேற்பு!





சட்டத்தரணி - ஆய்வாளர் சர்ஜூன் ஜமால்தீன் எழுதிய "இலங்கை ஈஸ்டர் தாக்குதல்கள் - நீதியும் தண்டனையும்", "சாட்சியமாகும் உயிர்கள்", "எம்.எச்.எம்.அஷ்ரஃபின் மரணம்" ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா, கடந்த வெள்ளிக்கிழமை (04) அக்கரைப்பற்று, அய்னா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் முன்னாள் அமைச்சரும், தேசிய காங்கிரஸின் தலைவரும் அக்கரைப்பற்று மாநகர சபை மேயர் ஏ.எல்.எம்.அதாவுல்லா உட்பட அரசியல் பிரமுகர்கள், புத்திஜீவிகள், கல்வியியலாளர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# காஸா தாக்குதல்களைக் கண்டித்து பேருவளையில் ஆர்ப்பாட்டம்








(பேருவளை பீ.எம்.முக்தார்)

இஸ்ரேல் பாலஸ்தீன காஸா மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதலை கண்டித்தும் சுதந்திர பலஸ்தீனுக்கு ஆதரவு தெரிவித்தும் இன்று 6ம் திகதி பேருவளை நகரில் மாப்பொரும் ஆர்பாட்டமொன்று இடம்பெற்றது.

பேருவளை மக்கள் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் இன,மத,மொழி,கட்சி பேதமின்றி அனைத்து இன மக்களும்,சமய தலைவர்கள், பல கட்சிகளை சேர்ந்த அரசியல்வாதிகள்,சமூக நல அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இஸ்ரேல் பாலஸ்தீன மக்களையும் விசேடமாக சிறுவர்களையும் கண்மூடித் தனமாக கொன்று இனச் சுத்தீகரிப்பு செய்வதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்வேறு சுலோகங்களை கையில் ஏந்தி மிக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இதில் சிறுவர்களும் பெண்களும் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

# அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா காத்தான்குடி கிளையின் ஏற்பாட்டில் பாராட்டு நிகழ்வு







(எம்.ஐ.அப்துல் நஸர்)

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா காத்தான்குடி கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு நிகழ்வொன்று ஜம்இய்யாவின் பதில் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ. அப்துல் கபுர் (மதனி) தலைமையில் ஜம்இய்யாவின் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம்.ஜவாஹிர் (பலாஹி) நெறிப்படுத்தலின் கீழ் கடந்த செவ்வாய்கிழமை (08) ஜம்இய்யா அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி நகர சபை, காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா காத்தான்குடி கிளையினால் கடந்த 2025 ஈதுல் அழ்ஹா ஹஜ் பெருநாள் சிறுவர் பஸர் நிகழ்வினை இஸ்லாமிய நெறிமுறைகள் மற்றும் விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையில் கலை, கலாச்சார நிகழ்வுகளையும், பாரம்பரிய விளையாட்டுக்களையும் ஒழுங்குபடுத்தி நடத்தியவர் களை கௌரவிக்கும் வகையில் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த வகையில் கலை, கலாச்சார நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி நடத்திய கலைஞர் கள், பாரம்பரிய விளையாட்டுக்களை ஒழுங்குபடுத்தி நடத்திய விளையாட்டு உத்தியோகத் தர் கள் மற்றும் விளையாட்டு ஆர் வலர் கள் ஆகியோர் இந் நிகழ்வில் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனார் .

இந் நிகழ்வில் காத்தான்குடி நகர சபை உறுப்பினர் எம்.கலீல் பரி, காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் மௌலவி அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம்.றமீஸ் ஹாபிழ் (ஜமாலி), அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் ரீ.எம்.எம்.அன்சார் (நளீமி), ஜம்இய்யாவின் உப தலைவரும் காத்தான்குடி மஃஹதுஸ்ஸூன்னா அந்நபவிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் தலைவருமான அஷ்ஷெய்க் எம்.சீ.எம்.றிஸ்வான் (மதனி), மற்றும் பல அதிதிகளுடன் ஜம்இய்யாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் கள், இலக்கிய மன்றங்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர் கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் .



அரபாத் பஹுர்தீன்




# 5 பந்துகளில் 5 விக்கெட்டுக்கள்

## வரலாறு படைத்த அயர்லாந்தின் கர்டிஸ் காம்பர்

அயர்லாந்தில் உள்நாட்டு ரி20 தொடரில் மன்ஸ்டர் ரெட்ஸ், நார்த்–வெஸ்ட் வாரியர்ஸ் அணிகள் மோதிய லீக் போட்டியில் அயர்லாந்தின் கர்டிஸ் காம்பர் 5 பந்தில் 5 விக்கெட் சாய்த்த முதல் வீரர் என்ற வரலாற்று சாதனை படைத்தார்.

வெள்ளிக்கிழமை (11) டப்ளினில் நடந்த உள்ளூர் ரி20 போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மன்ஸ்டர் அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களைக் குவித்தது. அணித் தலைவர் கர்டிஸ் காம்பர் 44 ஓட்டங்களையும், பீட்டர் மூர் 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நார்த் –வெஸ்ட் வாரியர்ஸ் அணி ஒரு கட்டத்தில் 11 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 78 ஓட்டங்களை எடுத்திருந்தது. 12ஆவது ஓவரை கர்டிஸ் வீசினார். இதன் கடைசி 2 பந்தில் வில்சன், கிரஹாம் ஆகியோரை ஆட்டமிழக்கச் செய்தார். மீண்டும் 14ஆவது ஓவரை வீசிய கர்டிஸ், முதல் பந்தில் மெக்பிரைனை (29) ஆட்டமிழக்கச் செய்து ஹெட்ரிக் சாதனை படைத்தார். தொடர்ந்து 2 மற்றும் 3ஆவது பந்தில் மில்லர், ஜோஸ் ஆகியோரின் விக்கெட்டுக் களையும் வீழ்த்தினார்.

இதனால் நார்த்–வெஸ்ட் வாரியர்ஸ் அணி 88 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மன்ஸ்டெர் ரெட்ஸ் அணி 100 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில், அயர்லாந்தின் கர்டிஸ் காம்பர் 5 பந்தில் 5 விக்கெட்டுக்களை சாய்த்த உலகின் முதல் கிரிக்கெட் வீரர் என்ற வரலாற்று சாதனை படைத்தார்.

ஏற்கனவே, கர்டிஸ் காம்பெர் கடந்த 2021இல் நெதர்லாந்துக்கு எதிராக ரி20 போட்டியில் 4 பந்தில் 4 விக்கெட் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை அணியின் முன்னாள் வீரரான லசித் மாலிங்க உலகக்கிண்ண போட்டி ஒன்றில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக 4 பந்துகளில் 4 விக்கெட்டுகள்களை தொடராகக் கைப்பற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# விம்பிள்டன் டென்னிஸ் தொடர்

## ஜெக்கோவிச்சை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தார் சின்னர்



நடப்பு ஆண்டின் விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதிப் போட்டியில் 7 முறை சம்பியன் மகுடத்தை வென்ற நவோக் ஜெக்கோவிச்சை 6:3, 6:3, 6:4 என்ற நேர் செட்களில் வீழ்த்தி முதல் முறையாக விம்பிள்டன் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார் தற்போதைய முதல் நிலை வீரரான ஜானிக் சின்னர்.

உலகப் புகழ் பெற்ற கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் கடந்த மாதம் ஆரம்பித்து இன்று (13) வரை நடைபெற்று முடிவுறவுள்ளது. இதில் ஆடவர் ஒற்றையர் மற்றும் இரட்டையர், மகளிர் ஒற்றையர் மற்றும் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் ஆகிய 5 பிரிவுகளாக போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

அதற்கமைய ஆடவர் ஒற்றையர் பிரிவில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற தீர்மானமிக்க 2ஆவது அரையிறுதிப் போட்டியில் தற்போதைய தரப்படுத்தலின் அடிப்படையில் உலகின் முதல் நிலை வீரரான இத்தாலியின் ஜானிக் சின்னர், முன்னாள் முதல்நிலை வீரரும் தற்போதைய 6ஆம் நிலை வீரருமான செர்பியாவின் ஜோகோவிச் உடன் மோதினார்.

இதில் ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய ஜானிக் சின்னர் முதல் செட்டை 6–3 என கைப்பற்றி ஆதிக்கத்தை செலுத்தினார். பின்னர் பின்தொடர்ந்த இரண்டாவது செட்டையும் முதல் செட்டை போன்று 6:3 என இலகுவாக வெற்றி கொண்டார். தொடர்ந்து இடம் பெற்ற தீர்க்கமான 3ஆவது செட்டை தன் 6:4 என வெற்றி கொண்டு 3:0 என்ற நேர் செட்களில் 7 முறை விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை தனதாக்கிய ஜெக்கோவிச்சை வீழ்த்தி முதல் முறையாக விம்பிள்டன் தொடரின் இறுதிப் போட்டியில் தடம் பதித்தார் சின்னர்.

அதற்கேற்ப இன்று (13) நடைபெறும் விறுவிறுப்பிற்குப் பஞ்சமில்லாத இறுதிப்போட்டியில் ஜானிக் சின்னர், அல்காரசை சந்திக்கிறார். அத்துடன் சமீப கால டென்னிஸ் தொடர்களில் இவ்விருவரும் மோதும் தொடர்ச்சியான 7ஆவது கிராண்ஸ்லாம் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டி இது என்பது டென்னிஸ் வரலாற்றில் சாதனை என்பது குறிப்பிடத்தக்கது.

# “Nohazz Info – 2025” கிண்ணத்தை சுவீகரித்தது அரசாங்க திரைப்பட பிரிவு



அரசாங்க தகவல் திணைக்களத்தில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்களிடத்தில் நட்புணர்வினை மேம்படுத்தும் நோக்கில் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற மென்பந்து கிரிக்கெட் போட்டி இவ்வருடமும் கடந்த சனிக்கிழமை பொல்ஹேன்கொட மகாமாத்ய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

“ Nohazz Info – 2025” கிண்ணத்துக்காக 06 அணிகள் மோதிய இந்த தொடரில் இம்முறை அரசாங்க திரைப்பட பிரிவு சாம்பியனாக தெரிவானது.

அதேபோன்று இரண்டாம் இடத்தினை பிரச்சாரப் பிரிவு பெற்றுக் கொண்டது.

இந்த கிரிக்கெட் தொடருக்கு பிரதான அனுசரனையினை “Nohazz ” நிறுவனம் வழங்கியதோடு, தொடரின் இறுதியில் “Nohazz” நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற ஊடக அடையாள அட்டை பிரிவின் தமாலி மதுஷானிக்கு பெறுமதியான துணி துவைக்கும் இயந்திரமொன்று பரிசாக வழங்கப்பட்டது.

இத்தொடரின் நாயகனாக பிரச்சார பிரிவின் முதித அபேநாயக்கவும், சிறந்த துடுப்பாட்ட வீரராக அரசாங்க திரைப்பட பிரிவின் கோலிதவும், சிறந்த பந்து வீச்சாளராக அரசாங்க திரைப்பட பிரிவின் ஷிரானும், இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக அரசாங்க திரைப்பட பிரிவின் ஜனகவும் தெரிவாகினர்.

அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ பண்டார தலைமையில் இடம்பெற்ற இந்த தொடரில், “ஜோயணண ” நிறுவனத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் இணை ஸ்தாபகர் திருமதி. ஜானகி விஜேசிங்க, அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி பிரியங்க சன்ஜீவ அவர்கள் உட்பட இணை அனுசரனை வழங்கிய நிறுவனங்களின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(எஸ்.ஏ.எம். பவாஸ்)




# பிபா கழக உதைப்பந்தாட்ட உலகக்கிண்ணம்

## மெட்ரிட்டை பந்தாடி இறுதிக்குள் நுழைந்தது பி.எஸ்.ஜி

பிபா கழகங்களுக்கு இடையிலான உலகக்கிண்ண உதைப்பந்தாட்ட தொடரின் அரையிறுதிப் போட்டியில் பலமிக்க ரியல் மெட்ரிட் கழகத்தை 4:0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் பந்தாடிய இத்தாலியின் பி.எஸ்.ஜி கழகம் இறுதிப் போட்டியில் செல்சி கழகத்தை எதிர்கொள்கிறது.

சர்வதேச உதைப்பந்தாட்ட பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்ற உதைப்பந்தாட்ட கழகங்களுக்கு இடையிலான உலகக்கிண்ண தொடரில் கடந்த 9ஆம் திகதி அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் உள்ள மெட்லைஃப் மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில், பாரிஸ் சாங்–ஜெர்மேன் **(PSG)** அணி, ரியல் மாட்ரிட் அணியை எதிர்த்தாடியது.

விறுவிறுப்பிற்குப் பஞ்சமின்றி ஆரம்பித்த போட்டியின் 6ஆவது நிமிடம் ரியல் மாட்ரிட் வீரர் ரவுல் அசென்சியோவின் தவறான செயற்பாட்டினை பயன்படுத்திய பி.எஸ்.ஜி கழகம் தமது முதல் கோலை உற்செலுத்தியது. தொடர்ந்த ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தில் ரியல் மெட்ரிட்டின் பின்கள வீரரான அன்டோனியோர ரூடிகரின் பிழையைப் பயன்படுத்திக் கொண்ட உஸ்மேன் டெம்பிலே பி.எஸ்.ஜி க்காக இரண்டாவது கோலை உட்செலுத்தினார்.

பின்னர் ஆட்டத்தின் 24ஆவது நிமிடத்தில் அச்ராஃப் ஹகிமியின் பந்துப் பரிமாற்றத்தை பெற்ற ஃபாபியன் ஷரூயிஸ் தனது இரண்டாவது கோலை அடிக்க பி.எஸ்.ஜி கழகத்தின் கோல் கணக்கு 3:0 ஆக இருக்க, அதே முன்னிலையுடன் முதல் பாதி முடிவுக்கு வந்தது.

தொடர்ந்த இரண்டாவது பாதி ஆட்டத்தில் ரியல் மெட்ரிட் கழகத்தினால் பதில் கோல் அடிக்கும் முயற்சி பலனளிக்காமல் போக ஆட்டத்தின் இறுதி நிமிடங்களான 87ஆவது நிமிடத்தில் வெத்து மாற்று வீரராக வந்த கோன்சாலோ ராமோஸ், பிராட்லி பார்கோலாவின் பந்துக் கடத்தலை பெற்று பி.எஸ்.ஜி கழகத்திற்கான நான்காவது கோலை அடித்தார். இறுதியில் போட்டி முழுமையாப் நிறைவடைய பி.எஸ்.ஜி கழகம் 4:0 என்ற கோல்கள் அடிப்படையில் பலமிக்க ரியல் மெட்ரிட் கழகத்தை பந்தாடி இறுதிச் போட்டிக்குள் நுழைந்தது. இறுதிப் போட்டியில் செல்சி கழகத்தை இன்று (13) எதிர் கொள்கிறது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.